





# அரசுக்கு எதிராக நேரடிப் போராட்டம்!


சுதந்திரன்

SUTANTIRAN

தொலைபேசி: 23411 விலை சதம் 25

வள்ளுவர் ஆண்டு 2004, கார்த். 24 உ (9-12-73) ஞாயிறு ஜுல்கம்: ஆசிர் 13—புத்தகம் 27 இதழ் 15


## தமிழர் கூட்டணி எந்தநிமிடமும் தொடங்கும்!

## ஐம்பெரும் தளபதிகளிடம் அதிகாரம் ஒப்படைப்பு!

இலங்கை வாழ் 35 இலட்சம் தமிழ்த் தேசிய இனத்தின் அரசியலுரிமைகளை நிலை நாட்டும பொருட்டு, அரசுக்கெதிராக நேரடிநடவடிக்கையில் இறங்குவதென்று தமிழர் கூட்டணியின் நடவடிக்கைக்குழு முடிவு செய்துள்ளது.

இந்த நேரடி நடவடிக்கை எந்த நிமிடத்திலும் ஆரம்பிக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நேரடி நடவடிக்கைக்கான திட்டங்களை உருவாக்கவும் அவற்றைச் செயற்படுத்தவும் பூரண அதிகாரம் கொண்ட போராட்டக் குழு ஒன்றையும் தமிழர் கூட்டணி நியமித்துள்ளது. ஐந்து தளபதிகளை கொண்ட இந்த போர்க் குழுவுக்கு, சர்வவல்லமையும் வழங்கப்பட்டுள்ளது.

இந்தக்குழுவின் தலைவராக இ தொ கா. தலைவர் திரு. எஸ் தொண்டமான் விளங்குகிறார். குழுவின் ஏனைய நான்கு தளபதிகளாக, தமிழர் கூட்டணியின் செயலாளர் நாயகமும் தமிழரசுக்கட்சி தலைவருமான நாவலர் அமிர்தலிங்கம், தமிழ் காங்கிரஸ் பொதுச் செயலாளர் திரு. மு. சிவசிதம்பரம், வவுனியா பா. உ. திரு. எக்ஸ். எம். செல்லத்தம்பு, சாவகச்சேரி

(7-ம் பக்கம் பார்க்க)

## வடக்கில் பயங்கர உணவு நெருக்கடி!

### கூட்டணி பா. உ.க்கள் சத்தியாக்கிரகம்?

யாழ்குடாநாட்டில் அரிசி விலையின் கொடூர உயர்வுக்கு காரணமாக இருக்கின்ற ஆனையிறவுத் தடையை உடனடியாக நீக்கி மக்களின் அன்றாட உணவுக் கஷ்டத்தைப் போக்க அரசு முன்வராவிட்டால், தடையை நீக்கும்படி கோரி நேரடி சட்டமறுப்பு, சத்தியாக்கிரகம் போன்ற நடவடிக்கைகளில் இறங்குவது பற்றி தமிழர் கூட்டணியின் வடபகுதிப் பா.உ க்கள் இப்போது தீவிரமாக ஆலோசித்துவருவதாகத் தெரியவருகிறது.

யாழ்குடாநாட்டு மக்கள் நாள் தோறும், அரிசிக்கும் பாணுக்கும் ஏனைய உணவுப் பொருட்களுக்கும் படுகின்ற இன்னல்கள் சகிக்கமுடியாதனவாகவுள்ளன; யாழ் மக்களின் உணவுப் பிரச்சினையை அரசு தாமதமின்றி தீர்த்து வைக்கத்தவறினுல் தமிழர் கூட்டணியினர் ஏதாவது ஒரு நேரடி இயக்கத்தை நடத்தியே தீரவேண்டும் என்ற கருத்து தமிழர் கூட்டணியின் நடவடிக்கைக்குழு உறுப்பினர்கள் மத்தியிலும் உறுதியாக இருந்து வருகிறது.

சென்றவாரம் அரிசி ஒரு கொத்து ரூபா பன்னிரண்டு வரை உயர்ந்ததையடுத்து—மக்கள் பசியும் பட்டினியு

(7-ம் பக்கம் பார்க்க)

### கடைசிச் செய்தி!

தமிழ் மக்களும் வடபகுதி பா.உ.க்களும் கடுமையாக எதிர்த்ததன் விளைவாக வடபகுதியில் அரிசி விலை உயர்வுக்கு காரணமான ஆனையிறவு தடை முகாமை நீக்கிவிட அரசு முடிவு செய்துள்ளது. இவ்வாரத்தில் இந்தத் தடை நீங்கும் என்றுதெரிகிறது.

## யாழ்ப்பாணத்திலேயே தமிழ் ஆராய்ச்சி மாநாடு

### அரசுக்கு இலங்கைக் கிளை அறிவிப்பு!

ஏற்கெனவே அறிவிக்கப்பட்டபடி நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாடு யாழ்ப்பாணத்திலேயே நடத்தப்படுமென்றும் இதில் எது வித மாற்றத்தையும் செய்வதற்கில்லையென்றும், தமிழாராய்ச்சிக் கழகத்தின் இலங்கைக் கிளை பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சுக்கு திட்டவட்டமாக அறிவித்துள்ளது. அரசின் பூரண ஒத்துழைப்பையும் இது விடயத்தில் அது கோரியுள்ளது.

இந்த மாநாட்டை யாழ்ப்பாணத்துக்குப் பதில் கொழும்பில் நடத்துமாறு பாதுகாப்பு அமைச்சு அனுப்பியிருந்த கடிதத்துக்கே இலங்கைக் கிளை மேற்கண்டவாறுகப் பதிலளித்துள்ளது.

இலங்கைத் தேசிய பேரவையின் 157 உறுப்பினர்களுக்கும் (அமைச்சர்களுட்பட) தமிழ்நாடு, பாண்டிச்சேரி அமைச்சர்கள் இந்திய மத்திய அரசு தமிழ் அமைச்சர்கள், மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளின் தமிழ் அமைச்சர்களுக்கும் இந்த மாநாட்டில் சிறப்பு விருந்தினர்களாக கலந்துகொள்ளும்படி அழைப்பு அனுப்பியுள்ளது இலங்கைக் கிளை.

1974 சனவரி 3ம் திகதி முதல் 9ம் திகதி வரை யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ள இந்த மாநாடு குறித்து தமிழாராய்ச்சி மன்ற இலங்கைக் கிளையின் பிரமுகர் ஒருவர் பின்வரும் தகவல்களை வெளியிட்டார்:-

(7-ம் பக்கம் பார்க்க)

## மனித உரிமைகள் தினத்தன்று மாணவர் கறுப்புப் பட்டி அணிவர்!

பல்கலைக்கழகப் பிரவேசம் தரப்படுத்தப்படுவதை ஆட்சேபித்து தமிழ் மாணவர்கள் மேற்படி இயக்கத்தை நடத்த முன்வந்துள்ளனர்.

மேற்படி கறுப்புப் பட்டி அணியும் இயக்கத்துக்கு யாழ்ப்பாணம் பெற்றோர் சங்கமும் ஆதரவு தரலாம்.

மனித உரிமைகள் தினம் 10. 12. 73ல் கல்விப் பொதுத்தராதர (சாதாரண தரப்) பரீட்சையின் நடுவே வருவதால் பரீட்சார்த்திகள் கறுப்புப் பட்டி அணிந்தே பரீட்சைக்குத் தோற்றும் வாய்ப்பு இதனுல் உண்டாகிறது.

கல்வித் திணைக்களத்தின் பாரபட்ச இனத்துவேச நடவடிக்கையை ஆட்சேபிக்கவும், அனைத்துலக கவனத்தைமேற்படி பாரபட்சத்தின்பால் ஈர்க்கவும் மனித உரிமைகள் தினம் ஒரு வரப்பிரசாதமாக அமைவதாக தமிழ்ப்பேசும் மாணவர்கள் கருதுவதாகத் தெரியவருகிறது.

## இரும்புத்திரை நாடாகிறது இலங்கை!

இலங்கையின் தேயிலைத் தோட்டங்களில் தோட்டத்தொழிலாளர்களான தமிழர்கள், எத்துணை தூரம் அவல வாழ்க்கை நடத்துகிறார்கள் என்ற உண்மை அண்மையில் இலண்டனில் டெலிவிசன் படக்காட்சியொன்றின் மூலம் திரையிட்டுக் காட்டப்பட்டது தெரிந்ததே.

இதனுல் இலங்கை மீது வெளிநாட்டார் கண்டனம் எழுப்பத் தொடங்கினர். இலங்கை அரசுக்கு இது பெருத்த அவமானமாகவும், பிரச்சினையாகவும் போய்விட்டது! குற்றமுள்ளநெஞ்சு குறுகுறுக்கத் தொடங்கியது.

இதன் காரணமாக இப்போது புதியசட்டம் பிறப்பித்திருக்கிறது இலங்கை அரசு. அதாவது—வெளிநாட்டார் யாரும் டெலிவிசன் கமராவுடன் இலங்கைக்குள் நுழையக்கூடாது; அப்படிக் கொண்டுவருவதாக இருந்தால் அரசின் முன் அனுமதி பெறவேண்டும் என்பதே அச்சட்டம்.

இலங்கையில் இரும்புத்திரை இறுகுகிறது என்பதற்கு இது மற்றோர் உதாரணம் அல்லவா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்




பூ. பகீரதன்,
வறுத்தலைவிளான்,
தெல்லிப்பழை.

கே: அண்ணன் வி. பி. யைக் கண்டு கனகாலம் ஆகின்றது. காரணம் யாதுவாக இருக்கும்?

ப: 'ஒரு பாதி கெனமன் கொள மற்றொரு பாதி விக்கிரமசிங்கா கொள — இரு பாதியாகி விட்டாராம்!

கே: அரசாங்கம் போகும் போக்கை பார்த்தால் வரும் பொதுத்தேர்தல் நடக்குமோ தெரியாது. இதைப் பற்றி உங்களது கருத்து என்ன?

ப: நாணயக்காரா மாட்டின் பெரேராவுக்குத்தான் வெளிச்சம்!

ஃ

க. சுந்தரலிங்கம்,
குருநாகல்.

கே: இலண்டனில் இருந்து வெளிவரும் தமிழ் பத்திரிகை 'இலண்டன் முரசு' பத்திரிகையை அதன் அச்சகத்தில் இருந்து வரவழைக்க முடியுமா? எந்த விலாசத்திற்கு தொடர்பு கொள்ள வேண்டும்?

ப: *LONDON MURASU, 81, Ashen Grove, LONDON, S. W. 20.* எனும் முகவரிக்கு எழுதிக் கேளுங்கள்!

ஃ

க. புஷ்பா,
கண்டி வீதி, கிளிநொச்சி.

கே: அமிர்தலிங்கம் என்ற அழகான தமிழ்ப் பெயரை வைத்துக்கொண்டு அமிர் என்ற முஸ்லீம் பெயரால் அண்ணர் அமிர்தலிங்கத்தை அழைக்கிறீர்கள்? ஏன்?

ப: பெயரைச் சுருக்கிக் கூறும்போது அமிர்தலிங்கம் "அமிர்' என அழைக்கப்படுகிறார். முஸ்லிம்களுக்கு "அமிர்' என்ற பெயர் கிடையாது 'அமீர்' தான் உண்டு சகோதரி!

ஃ

க. பத்மநாதன்,
கரவெட்டி.

கே: 'இலண்டன் முரசு' சஞ்சிகையை இப்பொழுது நாம் தொடர்ந்து எடுக்கலாமா? அப்படியானால் அந்நிறுவனத்தின் விலாசம் என்ன?

ப: குருநாக்கல் சுந்தரலிங்கத்துக்கு தந்த பதிலைப் பாருங்கள்!

ஃ

தி: பகவான்,
கொழும்பு.

கே: எதிர்கட்சி தலைவர் ஜே. ஆர். அவர்கள் கூட்டங்களில் மக்களுக்காக பேசுகிறாரே அவர் பிரதமரானால் தமிழ் மக்களுக்கு ஏதும் விமோசனம் கிடைக்குமா?

ப: தமிழர்களைப் பொறுத்தவரை ஜே. ஆரும், சிறிமாவும், ஒரே குட்டையிலூறிய மட்டைகளே!

ஃ

மா. கிருபானந்தன்,
குமரகோட்டம், மல்லாகம்.

கே: ஆளும் அரசாங்கத்துக்கு ஏன் ஒரு இடைத்தேர்தலை நடாத்த துணிவில்லை?

ப: நடாத்தினால் புதிய அரசியல் சட்டத்தை தமிழ் மக்கள் ஆதரிக்கிறார்கள் என்ற தங்கள் பொய்ப் பிரசாரம் உடைபட்டு விடும் என்பதுதான்!

கே: மறைந்த தலைவர் திரு. டட்லி சேனநாயக்கா பற்றி சில வரிகள்......

ப: தனது இனத்தின் மீதும் மொழி மீதும் விசுவாசமிக்க ஒரு தலைவர்!

ஃ

ச. வே. பஞ்சாட்சரம்,
மதுருஸ் கபே,
வண்ணார்பண்ணை.

கே: தமிழக அமைச்சர் சி. பா. ஆதித்தனார் அவர்களது முகவரி என்ன? அவர் என்ன துறைக்கு பொறுப்பாக விருக்கிறார்?

ப: ஆதித்தனார் கூட்டுறவுத்துறை அமைச்சர், பெயருடன், கூட்டுறவுத்துறை அமைச்சர், தமிழக அரசு தலைமைச் செயலகம், சென்னை, தமிழ் நாடு எனும் முகவரிக்கு எழுதுங்கள்!

ஃ

சு. மகேந்திரராஜ் (மகேன்)
கும்பிளாவளையடி,
அளவெட்டி.

கே: கடமை வீரர் நவரத்தினத்தின் விலாசம் யாது?

ப: பெயருடன், நுணுவில், சாவகச்சேரி.

ஃ

எஸ். எஸ். குமார்,
கொழும்பு 11.

கே: வடக்கே செல்லவிருந்த அம்மையார் திடீரென நிறுத்தியதன் நோக்கம் என்ன?

ப: எல்லாம் அந்தக் 'காலரா' அன்றியாரறிவார்?

கே: நமக்கென தனி நாடு தந்தால் நாம் பொருளாதார நெருக்கடி இன்றி வாழ முடியுமா?

ப: நிச்சயமாக வாழ முடியும்!

ஃ

ராஜ்மோகன்,
கொழும்பு-6.

கே: தரப்படுத்தல் திட்டத்தால் தமிழனுக்கு பாரபட்சம் நடைபெற இடமளிக்கமாட்டேன் என்கிறாரே குமாரசூரியர்?

ப: விட்டுத்தள்ளுங்கள் அவரது 'வீரத்தனத்தை'! இப்படித்தான் 1970-ஆண்டு சுளிபுரம் விக்டோறியா கல்லூரியில் நடைபெற்ற பழைய மாணவர் விழாவில் அடித்துப் பேசினார் திறமையடிப்படையிலேதான் பல்கலைக் கழகத்துக்கு மாணவர்கள் தெரிவு செய்யப்படுவார்கள் அதில் ஏதாவது சிறு மாற்றங்கள் நிகழுமானாலும் நான் அமைச்சர் பதவியை ராஜினமா செய்வேன் என்று இவர் அப்படி பேசிய பின்புதான் பல்கலைக் கழகத்தில் நுழைவதற்கு தமிழ் மாணவன் 250 புள்ளிகளும் சிங்கள மாணவன் 227 புள்ளிகளும் பெறவேண்டும் என்ற அப்பட்டமான பாரபட்சத்தரப்படுத்தல் திட்டம் அமுலாக்கப்பட்டது. அப்போது இவர் அதை ஆதரித்துக்கொண்டு அரசுடன் ஒட்டியிருந்தாரே தவிர அதை எதிர்த்து பதவியை விட்டு விலகவில்லையே! 'வராதுவந்த மாமணியாம்' அமைச்சர் பதவியை அவர் விடுவதாவது!

ஃ

எல். ஏ. நாயகம்,
வெள்ளவத்தை.

கே: மன்னார் தொகுதியில் தமிழர் முஸ்லீம்களின் சனத்தொகை விகிதம் என்ன?

ப: மன்னாரின் மொத்த வாக்காளர் தொகை, 25,441 இவர்களில் 46 வீதத்தினர் இலங்கைத் தமிழர்; 25 வீதத்தினர் முஸ்லிம்கள்; ஐந்து வீதத்தினர் சிங்களவர்; ஏனையோர் 24 வீதத்தினர். மதவாரியாக பார்த்தால், பௌத்தர் 3 வீதமும், கிறிஸ்தவர் 40 வீதமும், இந்துக்கள் 26 வீதமும் இஸ்லாமியர் 31 வீதமும் ஏனையோர் 40 வீதமும் ஆகும்.

ஃ

எம். டி. எச்.
மன்னார்.

கே: தமிழ் ஆராய்ச்சி விழா முக்கியமா? ஏழைத் தமிழனின் உயிர் முக்கியமா?

ப: தமிழனின் உயிரே தமிழ்தானே!

ஃ

எஸ். கே. வை. நாதன்,
வண்ணார்பண்ணை மேற்கு.

கே; ஓய் குயுக்தியாரே — உங்களைக் 'காலரா' நோய் அணுகவில்லையா?

ப: தமிழினத்தைப் பிடித்துள்ள 'சிங்கள ஆதிக்கம்' என்னும் 'பயங்கர காலரா' வையே எதிர்த்துப் போராடி வரும் எனக்கு இந்தக் 'காலரா' எம்மாத்திரம்?

கே: நான் ஒரு டைரக்டர் 'அரசியல் சந்தர்ப்பவாதிகள்' என்று ஓர் படம் தயாரிக்கப் போகிறேன். அதில் கதாநாயகனாக, குமாரசூரியரையும் கதாநாயகியாக திருமதி பண்டாரநாயகாவையும் போடலாமா?

ப; திருமதி பண்டாரநாயகாவை கதாநாயகியாகப் போடுவது சரிதான்! ஆனால் அரசியல் கோமாளி ஒருவருக்கு கதாநாயகன் வேடம் கொடுப்பது எப்படி?

கே: காவடியார் ஆட்டங்கள் அடங்கிவிட்டனவா?

ப: அடங்கும் — அன்று (அதாவது அடுத்த பொதுத் தேர்தலின்போது) அடங்கும்!

ஃ

த. பசுங்கிளி ராணி,
சந்திரவாசம்,
சந்தை. பண்டத்தரிப்பு.

கே: எங்கள் வீட்டில் தந்தை செல்வாவுடனும், இராசதுரையுடனும் மக்கள் திலகம் எம். ஜி. ஆர். இணைந்த படம் தொங்கிக் கொண்டிருந்தது. எம். ஜி. ஆர். 'இலண்டன் முரசுக்கு' அளித்த பேட்டியின் பின், இதைக் கழற்றி உடைக்கச் சொல்கிறா என் அண்ணன் இவற்றை உடைக்காதுபாதுகாக்க ஒரு புத்திமதி கூறுவீர்களா?

ப: அ. தி. மு. க. தலைவர் திரு எம். ஜி. ஆர். அவர்களிடம் இன்னும் நான் நம்பிக்கை இழக்கவில்லை; இலங்கையில் பிறந்த எம். ஜி. ஆர். அவர்கள், இலங்கைத் தமிழர்களுக்கு பாதகமாக நடப்பதற்கு அவரது மனச்சாட்சி ஒருபோதும் இடங்கொடுக்காது என்றே இன்னமும் நம்புகிறேன். பொறுத்திருந்து பார்ப்போம்.

# தென்னகத் தமிழர்கள் அந்நியர்களா?

முற்போக்குக் கூட்டிலிருந்து, அதே முற்போக்கு குஞ்சுகளால் கூழ் முட்டையடிபட்டு, அதன் காரணமாக 'நற்போக்காளராக' மாறிய எழுத்தாளர் ஒருவர், இந்தியாவுக்கு அண்மையில் சென்றிருந்த சமயம் கவிஞர் கண்ணதாசனைச் சந்தித்து, இலங்கை அரசியல் பற்றிப் "போதனை" நடத்திய விஷயத்தை சமீபத்தில் இந்தப் பத்திகளில் அம்பலப்படுத்தியிருந்தேன் அல்லவா?

நான் குறிப்பிட்ட அந்த எழுத்தாளர் தனது 'கூழ் முட்டை' பத்திரிகை ஒன்றில் இது பற்றி ஒப்புதல் வாக்கு மூலம் ஒன்றைக் கொடுத்துள்ளார். அவர் அந்தவாக்கு மூலத்தில் பின்வரும் இரு உண்மைகளை ஒப்புக்கொண்டிருக்கிறார்.

(1) இலக்கியப் பிரச்சினைகள் பற்றி கண்ணதாசனுடத்தில் அவர் பேசிய நேரத்தில், இலங்கைத் தமிழர்களின் அரசியல் பிரச்சினை பற்றியும் பேசப்பட்டிருக்கிறது.

(2) 'ஆதாரமற்றதகவல்களையும், திரித்துக் கூறப்பட்டதகவல்களை' யும் வைத்தே கண்ணதாசன் இலங்கைத் தமிழருடைய பிரச்சினைகள் பற்றிக் கருத்துத் தெரிவிப்பதாக இவர் சுட்டிக் காட்டியிருக்கிறார்.

இவர் கண்ணதாசனுக்கு இவ்வளவு அரசியல் 'விளக்கங்கள்' அளித்த பிறகும் கண்ணதாசன் அக்டோபர் 3ம் திகதி சென்னையில் நடைபெற்ற இலங்கைத் தமிழருக்கான ஆர்ப்பாட்டத்துக்கு தலைமை தாங்கியிருக்கிறார் என்றால் இவரது உபதேசம் கண்ணதாசன் அவர்களால் குப்பைத் தொட்டிக்குள் போடப்பட்டிருக்கிறதன்றி வேறென்ன?

இந்திய நாட்டில் இந்தியுடன் தமிழ்மொழிக்கு சம உரிமை கோரி ஓர் இயக்கம் நடத்தப்பட்டால் — அந்த இயக்கத்துக்கு ஆதரவு தந்து, தமிழுக்கு சம அந்தஸ்து கொடுக்கவேண்டும் என்று அமெரிக்க அரசாங்கம், இந்திய அரசாங்கத்தினை




வற்புறுத்துவதை நீங்கள் வரவேற்பீர்களா என்று இவர் கண்ணதாசனிடம் கேட்டதாகவும்—நிச்சயம் ஆதரிக்கமாட்டேன் என்று கண்ணதாசன் அதற்கு பதிலளித்ததாகவும், அதே போலவே ஈழ நாட்டின் சுய ஆதிபத்திய உரிமைகளிலே தலையிடுவதற்கு அந்நியர்களுக்கு (அதாவது தென்னகத் தமிழர்களுக்கு) உரிமை இல்லையென்று இவர் கூறியதாகவும், அதை கண்ணதாசன் ஏற்றுக்கொண்டதாகவும், அளந்திருக்கிறார் இந்த நற்போக்காளர்.

இந்தியர்களுக்கு அமெரிக்கர்கள் அந்நியர்கள் தாம்; அதற்கு அட்டியில்லை ஆனால் இலங்கைத் தமிழர்களுக்கு தென்னகத் தமிழர்கள் எப்படி அந்நியர்களாவார்கள்? இனத்தால் மொழியால், கலாசாரத்தால், பழக்கவழக்கத்தால், மதத்தால் — ஒரு தாய் வயிற்றுச் சகோதரர்களாக இருக்கும், இந்தியத் தமிழர்களும் இலங்கைத் தமிழர்களும் எப்படி ஒருவருக்கொருவர் அந்நியர்களாகஇருக்க முடியும்? ஒரே இனத்தவரை அந்நியர்கள் என்று எப்படிக் கூறிட முடியும்?

பங்களாதேஷ் பிரச்சினையில் இந்திய அரசு தலையிட்டதற்கு சொல்லப்பட்ட காரணங்களைவிட — எத்தனையோ நியாயமான ஆயிரம் காரணங்களை, தென்னகத் தமிழர்கள் இலங்கைத் தமிழர்களின் பிரச்சினைகளில் தலையிடுவதற்கு ஆதரவாககூற முடியுமே!

கம்யூனிஸ்டுகளின் கண்ணோட்டத்தில்—ஹங்கேரி, செக்கோசிலவேக்கியா போன்ற நாடுகளின் ஆதிபத்திய உரிமைகளில் சோவியத் ரஷ்யா தலையிட்டது மட்டும்சரியாகப்படுகிறது தென்னகத் தமிழர்கள், ஈழத் தமிழர்களின் பிரச்சினையில் தலையிடும் போது மட்டும், அவர்கள் 'அந்நியர்'களாகி விடுகிறார்கள்.

மொழி, இன உணர்வும் பற்றும் அற்ற கொம்யூனிஸ்ட் குட்டைக்குள் ஊறிய மட்டைதானே இந்த நற்போக்காளரும்? இவரிடம் இதையன்றி வேறு எதை எதிர்பார்க்க முடியும்?

★

"நம் நாட்டிலே எழுத்தாளர்களுக்கு உரிய இடம் அளிக்கப்படவேண்டும். அங்கீகரிக்கப்பட்ட நாடறிந்த எழுத்தாளர்களுக்கு மாதாமாதம்வேதனம் கொடுத்தாற்கூட எதுவித நஷ்டமுமேற்பட்டுவிடமாட்டாது.

மாதாமாதம் சம்பளந்தான் கொடுக்காவிட்டாலும் வருடத்திற்கொரு தடவையேனும் எழுத்தாளனுக்கு ஒரு 'நிதியுதவி' வழங்கப்பட்டாகவேண்டும். கலாச்சார அமைச்சு அச்சியற்றப்பட்ட நூல்களைத் தேர்ந்து பரிசு கொடுப்பதுடன் மட்டும் அமைதிகொள்ளாது கையெழுத்துப்பிரதிகளைத் தேர்ந்து பரிசு கொடுக்கும் முறையையும் நடைமுறைக்குக் கொண்டுவரவேண்டும். அஃது பொருளாதார நலிவுற்ற ஆற்றல்மிக்க எழுத்தாளர்களின் நல்ல நல்ல ஆக்கங்கள் நூலுருப் பெற உதவிபுரிவதாயமையலாம்.

"ஒரு எழுத்தாளனுக்கு எடுக்கப்படும் பாராட்டு விழாவிலே பேசும் ஒரு எழுத்தாளனென்கிற ரீதியில், இக்கோரிக்கையை உரிமையுடன் அரசாங்கத்திற்கும் மக்களுக்கும் சமர்ப்பிக்கின்றேன்."

—இந்தக் கருத்துக்களை அண்மையில் மன்னாரில்தமக்கு அளிக்கப்பட்ட பாராட்டு விழா ஒன்றில் வெளியிட்டுள்ளார் வன்னியூர்க் கவிராயர். அரசின் காதில் இந்த ஏழைத் தமிழ் எழுத்தாளனின் கோரிக்கை எங்கே விழப்போகிறது?

'இலக்கிய சித்தன'
எழுதும்
'இலக்கியச் சிந்தனைகள்'
கட்டுரை
அடுத்த வாரம்
இடம்பெறும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் மடல்

# இலங்கை அரசின் இரும்புத்திரை

அன்பு நண்பா,

'முதுகில் புண்ணுடையவர்கள் காடு நுழைந்திடப்பயப்படுவார்கள்' என்றுகூறப்படுகின்ற முதுமொழி உனக்குத் தெரியுமே! நம்முடைய தமிழர் கூட்டணியினரை-தமிழ் விடுதலைவேண்டிநிற்கின்ற தன்மானச்சிங்கங்களை-வெளிநாடுகளுக்கு செல்லவிடாமல் தடுக்கின்ற சிங்கள ஆட்சியினரின் சின்னத்தனம் இருக்கின்றதே — அதைப் பார்த்திடும் போது எனக்கு மேற்சொன்ன முதுமொழிதான் நினைவுக்கு வந்திடுகிறது!

நம்முடைய நாவலர் அமிர்தலிங்கம் அவர்கள் இந்தியாவுக்குச் செல்ல அனுமதி கேட்டிடின், அதற்கு அனுமதி மறுப்பு; நம்முடைய உடுவில் பா. உ. தர்மலிங்கம் அண்ணன் வெளிநாட்டுக்கு—இந்தியாவுக்கு கூட அல்ல—ரஷ்யாவுக்கு செல்ல அனுமதி கேட்டிடின், அதற்கு அனுமதி மறுப்பு; நம்முடைய நாவலரின் துணைவியார் சகோதரி மங்கையர்க்கரசியார், இந்தியாவில் படித்திடும் தன்மைந்தனைப் பார்ப்பதற்கு சென்றிட அனுமதி கேட்டிடின், அதற்கும் மறுப்பு; இவ்வாறு, வெளிநாடுகளுக்கு செல்லவிடாமல் இந்நாட்டுத் தமிழர் தலைவர்களுக்கு—தமிழ் ஈழவிடுதலை அணியினருக்கு இரும்புத்திரை போட்டு தடுக்கிறது சிங்கள ஆட்சி!

ஏன் இவ்வாறு தடை போடுகிறார்கள்? இரும்புத்திரையிட்டு தடுத்து வைத்திருக்கிறார்கள் என்பதை ஒரு கணம் சிந்தித்திடின்— ஈழத்தில் தமிழ் தேசிய இனம் எவ்வாறெல்லாம் நசுக்கப்படுகிறது என்பது வெளியுலகுக்குத் தெரிந்து விடக்கூடாது என்பதிலேயே இந்நாட்டின் சிங்கள ஆட்சி அதிக அக்கறை செலுத்திவருகிறது என்ற உண்மை எவருக்கும் பளிச்சென்த்தெரிந்திடும்!

எவன் ஒருவன்—பிறர் பார்த்துவிடக்கூடாதே—பிறர் அறிந்துவிடக்கூடாதே என்கின்ற அச்சத்துடன், அங்கும் இங்கும் திரும்பிப் பார்த்து, பயந்துபயந்து ஒரு காரியத்தைச் செய்கின்றானோ அவன் செய்கின்ற அந்தக் காரியம் நிச்சயம் நேர்மையானதல்ல—மனச்சாட்சிக்கு அமைந்ததல்ல—நியாயமானதல்ல என்பதனை உலகோர் ஒப்புவர்.

தான் செய்திடுவது நியாயம் எனக்கண்டால்—தன்பக்கம் நீதி இருப்பதாக தன்மனச்சாட்சிப்படி ஒருவன் கருதுவானானால் — அவன் எந்த ஒரு காரியத்தையும் ஒழித்து மறைத்து, மற்றவர்களுக்கு தெரியாமல் செய்திடவேண்டியதில்லை; மற்றவர்களுக்கு தெரிந்து விடுமே என்று பதட்டமடைய வேண்டியதுமில்லை!.

பிறரால் பழிக்கத்தக்க — அறவோரால் வெறுக்கத்தக்க—அறிஞர்களால், மனித மனம் படைத்தவர்களால் நிராகரிக்கப்பட்ட கேடுகெட்ட செயல்களில் ஈடுபடுவோர் மட்டுமே—தாம் செய்யும் ஈனத்தனமான காரியம் எங்கே வெளியே தெரிந்துவிடுமோ என்று அஞ்சிடுவர்; யாராவது வெளியே இதைச்சொல்லிவிட்டால் என்ன செய்திடுவது என்று நடுங்கிடுவர்; அப்படியாராவது அயலவரிடத்திலே அதைச் சொல்லிவிட்டால், — சொன்னவன் பலகீனனாக இருந்திடின், அவனை உருட்டிமிரட்டி அடக்கியொடுக்கிடுவர்! தொல்லை மிகக் கொடுத்திடுவர்!

நண்பா, சிங்கள அரசு இந்நாட்டில் வாழுகின்ற 35 இலட்சம் தமிழ்த் தேசிய இனத்தினரின் அடிப்படை சனநாயக உரிமைகளை — அரசியலுரிமைகளை அடியோடு மறுத்து, தமிழர்களின் தனித்துவத்தை அழித்தொழித்திடும் நடவடிக்கைகளை, மேற்கொண்டுவருகிறது— புதிய அரசியல் சட்டத்தின்கீழ் தமிழ் இனம் அடிமை இனமாக — ஆளப்படும் இனமாக— ஆக்கப்பட்டிருக்கிறது; சிங்கள மொழிக்கு அரசகரும மொழியென்று முடிசூட்டப்பட்டிருக்கும் அதே வேளையில் தமிழ்மொழியின் ஆட்சிமொழியுரிமை மறுக்கப்பட்டிருக்கிறது; பௌத்த மதத்துக்கு அரசியல் சட்டரீதியாக முதலிடமும் முதன்மை அந்தஸ்தும் வழங்கப்பட்டு, அந்த மதத்தைப் பேணி வளர்த்தலும், பாதுகாத்தலும், அரசின் கடமையென்று அரசியல் சட்டரீதியாக ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கும் அதே வேளையில், சிறுபான்மை மதங்களான, இந்து, கிறிஸ்தவ, இஸ்லாமிய மதங்களுக்கு இத்தகைய பாதுகாப்பும், அந்தஸ்தும் தரப்படவில்லை; அடிப்படை உரிமைகளுக்கு உத்தரவாதம் அளிக்கப்படவில்லை; கல்வித்துறையில் 'தரப்படுத்தல்' எனும் திட்டத்தின் கீழ் தமிழ் மாணவர்களின் உயர் கல்விக்கு— பல்கலைக்கழகக் கல்விக்கு — தடைகள் பல போடப்படுகின்றன; தமிழ் மக்களின் சார்பில் தமிழர் கூட்டணி விடுத்திட்ட ஆறு அம்சக் கோரிக்கை அலட்சியப்படுத்தப்பட்டு, தமிழினம் இரண்டாந்தர நிலைக்கு தள்ளப்பட்டு இருக்கிறது; தமிழ் இனத்தின் அரசியலுரிமைகளைக் கோரிப் போராடிய தமிழ் இளைஞர்கள் வருடக்கணக்காக நீதி விசாரணை ஏதுமின்றி சிறையிலடைக்கப்பட்டு, அடித்து உதைக்கப்பட்டு, சித்திரவதை செய்யப்பட்டுவருகிறார்கள்; தமிழ் நாட்டுக்கும் ஈழத்தமிழர்களுக்குமிடையே, பன்னெடுங்காலமாக இருந்துவருகின்ற கலாசார, மொழி, இலக்கிய மதத்தொடர்புகளைத் துண்டித்து ஈழத்தமிழினத்தை தனிமைப்படுத்தி அழித்திடத் திட்டம் தீட்டப்படுகிறது; தமிழ் பிரதேசத்திலுள்ள அரசாங்க காணிகளில் குடியேறும் சிங்களவர்களுக்கு வாழ்த்தும் வரவேற்பும் வசதிகளும் கிடைத்திடும் அதே வேளையில் மலையகத்தமிழன் அங்கு குடியேறினாலோ இராணுவத்தினாலும், பொலிசாலும் விரட்டியடிக்கப்படுகிறான்; இவ்வாறு, இந்நாட்டுத் தமிழர்களுக்கு, ஆட்சியாளர் இழைத்துவருகின்ற இன்னல்கள், கொடுமைகளை எடுத்துரைக்கின் விரியும். நம்முடைய தமிழர் தந்தை பெரியவர் செல்வா அவர்களும், தமிழர் கூட்டணியும், அனைத்துலக நீதிச்சபைக்கு அனுப்பிவைத்துள்ள பாரபட்சப்பட்டியலில்தான் பெரும்பாலானவை கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளதே!

ஐ. நா, சபையின் மனித உரிமைச் சாசனத்துக்கு முற்றுமுரணாகவும், நாகரிக நாடுகள் எல்லாம் வெட்கித் தலைகுனியும் அளவுக்கும் உள்நாட்டில், தமிழ் தேசிய இனத்தை ஒழித்துக்கட்டும் மேற்கண்டவாறான 'இனக்கொலை' முயற்சிகளில் ஈடுபட்டிருக்கின்ற சிங்கள அரசுதான்—உலக அரங்கில், வெளிநாடுகளின் கண்களின் முன்னே 'இந்தப் பூனையும் பால் குடிக்குமா?' என்பதுபோல நல்லவன் வேடம்போட்டு நயவஞ்சக நாடகமாடிவருகிறது; தென்னாபிரிக்க இனவெறியையும், றொடீசியாவின் நிறவெறியையும் கண்டிப்பதாக பீற்றிக்கொள்கிறது; உலக நாடுகளினதும், தேசிய இனங்களினதும் சுயநிர்ணய உரிமையை மதிப்பதாக கொக்கரித்துவருகிறது!

உள்நாட்டில் 'இனக்கொலை'; உலக அரங்கிலோ தேசிய இனங்களின் காவலன்! உள்நாட்டில் குறுகிய இனத்துவேஷம், பாரபட்சம்; வெளிநாடுகளின் முன்னர், நடுநிலைமை பெருந்தன்மை, இனவாதத்துக்கு எதிர்ப்பு; உள்நாட்டில் தமிழினத்தின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தை நசுக்கிட சீனாவிடமிருந்து ஆயுதம் வாங்கிக் குவித்திடுவது — வெளிநாடுகளின் முன்னர், இனங்களின் சுயநிர்ணய உரிமைப் பாதுகாவலன்! உள்நாட்டில் தமிழினத்தின் தனித்துவத்தை அழித்திட முயற்சி — உலக அரங்கில், தேசிய இனங்களின் தனித்துவத்தைக் காப்பாற்றிடவேண்டுமென்ற கூக்குரல்! இப்படி உள்ளேயொன்றும், வெளியேயொன்றுமாக, கபடநாடகமாடிவரும் சிங்கள அரசு, தனது 'நல்லவன் வேடம்' கலைகின்ற நிலைமை தோன்றுமானால், அதை எப்படிச் சகித்துக்கொள்ளமுடியும்?

நண்பா, உண்மையான — வேடதாரியல்லாத — நல்லவன் ஒருவன் இருக்கிறான் என்று வைத்துக்கொள்! இந்த நல்லவனைப் பற்றி மற்றொருவன், ஊரைக் கூட்டி வைத்துக் கொண்டு, 'பாருங்கள், இவன் கெட்டவன், எனக்கு அடிக்கிறான், உதைக்கிறான். என்னைக் கொலைசெய்ய முயற்சிக்கிறான்' என்று கூக்குரலிடுவானானால் — அதற்காக அந்த நல்லவன் கோபப்படமாட்டான்: ஆத்திரம் கொள்ளமாட்டான்; அவன் நன்றாக சொல்லட்டுமே; அதனால் எனக்குஎன்னவந்தது? நான் அவனுக்கு மனச்சாட்சிப்படி கெடுதி ஒன்றும் செய்யவில்லையே — அப்படிப்பட்ட என்னைப் பற்றி இவன் குறை கூறினால், இவனையே உலகம் திட்டும்; ஏனெனில் என் மீதுதான் அப்பழுக்கில்லையே; என்று கூறிவிட்டு அமைதியுடனிருந்துவிடுவானே தவிர—நாலு 'சண்டியர்களை' ஏவிவிட்டு, ஊரைக் கூட்டிவைத்து என் மீதா களங்கம் கற்பித்தாய் என்று உதைக்க மாட்டான் — ஏனெனில் அவன் நல்லவன் — உதட்டளவில் மட்டும் அல்ல—உள்ளத்திலும்!

ஆனால் — நல்லவன் போல வேடமிட்டு நடிப்பவனோ இப்படிக் கூறினால் விடுவானா என்ன? வந்தது என் வேடத்துக்கு ஆபத்து; பாவிப்பயல், என் உண்மையான தோற்றத்தையே வெளிக்காட்டிவிடுவான் போலிருக்கிறதே; என் வேடமே கலைந்துவிடும் போலிருக்கிறதே — என்று அச்சம் மேலிட குற்றம் சுமத்தியவன் மீது சீறி விழுந்திடுவான்; 'சண்டித்தனம்' புரிந்து என்றாலும், தன் வேடம் கலைந்திடாதபடி பார்த்துக்கொள்ளவே முயற்சிப்பான். ஏனெனில் இவன் ஊருக்கு முன்னால் [illegible] தவிர — உள்ளத்தினால் நல்லவன் அல்லன்!

இந்த வேடதாரியைப் போலவே தான்— உள்நாட்டில், தமிழ் தேசிய இனத்தை அழித்தொழித்திடதான் மேற்கொள்ளும் 'இனக் கொலை' முயற்சிகள் — எங்கே வெளியே தெரிந்துவிடுமோ—நாகரிக நாடுகளின் கண்களில் தான் நடத்தும் அநாகரிக அரசியல் எங்கே விழுந்துவிடப்போகிறதோ என்று உள்ளூர அஞ்சிக்கிடக்கிறது சிங்கள அரசு! இந்த அச்சம் காரணமாகவே தமிழர் கூட்டணியினரை — தமிழ் விடுதலை உணர்வு கொண்டோரை—வெளிநாடுகளுக்கு செல்லவிடாமல் அனுமதி மறுத்துவருகிறார்கள் ஆட்சியினர்!

தந்தை செல்வா, இந்தியாவுக்கு சென்றிருந்தபோது—தமிழர்கள் இலங்கையில் கொடுமைப்படுத்தப்படுகின்றார்கள்; அடிமைப்படுத்தப்படுகின்றார்கள்; அவர்களின் முன்னேற்றம் தடுக்கப்படுகிறது; சிங்களவர்கள் மிலேச்சத்தனமாக நடக்கிறார்கள் என்றெல்லாம் கூறிவிட்டதாக புகார் கூறியிருக்கிறார் பாதுகாப்பு பிரதியமைச்சர் லக்ஸ்மன் ஜெயக்கொடி — தேசிய அரசுப் பேரவையில்!

நண்பா, சிங்கள ஆட்சியாளரைத் திருப்பிக்கேட்போம் — உண்மையிலேயே — இலங்கையில் தமிழர்கள் கொடுமைப்படுத்தப்படவில்லையானால் — அடிமைப்படுத்தப்படவில்லையானால்—தமிழர்களின் முன்னேற்றம் தடுக்கப்படவில்லையானால்—சிங்களவர்கள் மிலேச்சத்தனமாக தமிழர்களை நடத்தவில்லையானால்—தந்தை செல்வா அவர்கள் இந்தியாவில் எதையாவது கூறியிருக்கட்டுமே! அதற்கு நீங்கள் ஏன் பயப்படவேண்டும்? நீங்கள் தமிழினத்துக்கு உங்கள் மனமறிய ஒரு தீமையும் செய்யவில்லையானால்-அந்த 75 வயதுக் கிழவனின் நடுங்கும் வார்த்தைகளுக்கு ஏன் பயப்படுகிறீர்கள்? காரணம் — உலக அரங்கில் உங்கள் வேடம்கலைகிறதே என்ற அச்சம் தான்!

இலங்கைத் தமிழர்களின் அரசியல் உரிமைகள் அனைத்தும் இலங்கை அரசினால் வழங்கப்பட்டிருக்கும் ஒரு சூழ்நிலையில்—இந்தியா சென்றிருந்த தந்தை அவர்கள், இலங்கை அரசுக்கு எதிராக பொய்யான குற்றச்சாட்டுக்களை இட்டுக்கட்டி கூறியிருப்பாரானால் — இந்நாட்டுத் தமிழ் மக்களே தந்தை செல்வா மீது கோபம் அடைந்து — 'இப்படி வீண்பழி சுமத்துகிறாரே இந்தக் கிழவன்' என்று வெறுப் படைந்திருப்பர்!

எனவே நண்பா, இலங்கையில் தமிழர்களுக்குஎதிராக இழைக்கப்படுகின்ற அநீதிகள் வெளியுலகில் மெல்லமெல்லத் தெரிய ஆரம்பித்ததும், சிங்கள அரசு பரபரப்படைகிறது; பயந்து நடுங்குகிறது; அதன் பிரதிபலிப்புத்தான், தமிழர் கூட்டணியினருக்கு இந்தியாவுக்கும், ஏனைய வெளிநாடுகளுக்கும் செல்வதற்கு அனுமதி மறுக்கின்ற செயலாகும்!

ஆனால், வெளிநாடு செல்வதற்கு தமிழர் கூட்டணியினருக்கு அனுமதி மறுக்கப்படுவதொன்றே—உள்நாட்டில் தமிழினம் எப்படி நசுக்கப்படுகின்றது என்பதை வெளிநாட்டார் நன்கு அறிந்துகொள்வதற்கு தக்க சான்றாக அமைந்திருக்கிறது.

தமிழ்நாட்டில் படிக்கின்ற தன் மகனைப் பார்ப்பதற்கு செல்கின்ற சாதாரண விஷயத்துக்கே நமது நாவலரின் துணைவியார் சகோதரி மங்கையர்க்கரசிக்கு பிரயாண அனுமதி வழங்க இலங்கை அரசு மறுத்துள்ளது என்பதை வெளிநாடுகள் அறிந்திடும்போது — ஏனைய அரசியல் விஷயங்களில் தமிழர்களுக்கு எதிராக எத்தனை கொடுமை, பாரபட்சம், கெடுபிடியெல்லாம் ஈழத்தில் நடக்கின்றன என்பதை அவை தமது மதியூகத்தினால் அறிந்துகொள்ளும்! அறிந்துகொள்ள முயற்சிக்கும்!

எனவே நண்பா, உலக நாடுகளின் கண்களின் முன்னால் நல்லவன் வேடம் போடுகின்ற இலங்கை அரசு — உள்நாட்டில் தமிழினத்துக்கு எதிராக இழைத்துவருகின்ற அநீதிகள் வெளியுலகுக்கு தெரிந்து — அதன் மூலம், இலங்கை அரசின் வேடம் கிழித்தெறியப்படும் காலம் அதிக தூரத்தில் இல்லை...! ஈழத்தமிழ் தேசிய இனத்தின் விடுதலைப் போராட்டத்துக்கு உலக நாடுகளின் ஆதரவும் அனுதாபமும் கிடைக்கும் காலமும் அதிக தூரத்தில் இல்லை.

அதே நேரத்தில் நண்பா, இலங்கையில் தமிழினத்துக்கு எதிராக இத்தகைய அடக்குமுறைகள் அதிகரிக்குமானால் அந்த அடக்குமுறையின் முடிவில் என்ன நடக்குமென்பதை டாக்டர் என். எம். பெரேராவும் அவரது தோழர்களுமே நன்கு அறிந்திடுவர்; ஏனெனில் வெள்ளைக்கார ஆட்சியின் அடக்குமுறையை சகிக்கமுடியாமல், இந்தியாவுக்கு களத்தனமாக வல்வெட்டித்துறை வழியாக ஓடிச் சென்று அங்கிருந்து அரசியல் நடத்தியவர்கள் அல்லவா அவர்கள்!

உன் அன்புத் தோழன்

கோவை-மகேசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணம்

## தரப்படுத்தல்!

ஒரு பொய்யை மறைக்கப் போனால் ஒன்பது பொய் கூறவேண்டிவரும் என்று சொல்வார்கள்—

'தரப்படுத்தல்' எனும் அரசின் கல்விக்கொள்கை பற்றி நாளாந்தம் கல்வியமைச்சினால் தரப்பட்டுவரும் ஒன்றுக்கொன்று முரண்பட்ட விளக்கங்கள் — விமர்சனங்கள் — பரிந்துரைகள்—போன்றவற்றை படிக்கும்போது, மேற் கண்ட முதுரையே நமக்கு நினைவுக்கு வருகிறது.

பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை தேர்ந்தெடுப்பதில் 'தரப்படுத்தல்' எவ்வாறு — எந்த அடிப்படையில்— நடைபெறுகிறது என்பதற்கான விளக்கத்தை மக்களுக்கு புரிகின்ற எளிமையான மொழியில் எடுத்துச்சொல்வதற்கு கல்வியமைச்சுக்கு இன்னும் புரியவில்லை!

உண்மையில் கல்வியமைச்சுக்கு புரியவில்லைத்தானா — அல்லது மக்களுக்கு புரியாமலிருக்க வேண்டுமென்பதற்காகவேதான் வேண்டுமென்றே அவ்வாறு 'மயக்க' மொழியில் விளக்கம் தரப்படுகிறதா என்பதும் கேள்விக்குரிய விடயமே!

பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களைத் தெரிவு செய்கின்ற பூரண அதிகாரமும் பல்கலைக்கழக அதிகார பீடத்திடம் கையளிக்கப்பட்டிருந்த காலங்களில்—'பாரபட்சம்' என்ற புகார் எழுந்ததே கிடையாது.

பல்கலைக்கழகப் புதுமுகப் பரீட்சையில் மாணவர்கள் பெறும் எவ்வகையிலும் மாற்றப்படாத புள்ளிகளை அடிப்படையாக வைத்து பல்கலைக்கழக அதிகாரிகள், இனமத, மொழி பேதமின்றி, முழுக்கமுழுக்க திறமை, தகுதி ஆகியவற்றின் அடிப்படையில் மாணவர்களைத் தெரிவு செய்து வந்தனர்.

ஆனால் — எப்பொழுது கல்வித்துறைக்குள் — அரசியல் நுழைந்ததோ அன்றே பல்கலைக்கழக அதிகாரிகளின் இந்தச் சுயேச்சையான தெரிவுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது; குறுகிய இனரீதியான சிந்தனை புகுத்தப்பட்டது:

பல்கலைக்கழகப் புகுமுகப் பரீட்சையில் மாணவர்கள் எடுக்கும் புள்ளிகள் பரீட்சைத் திணைக்களத்தால் முதலில் மொழி அடிப்படையில் 'தரப்படுத்தப்பட்ட' பின்னரே — இப்போதெல்லாம் பல்கலைக்கழக அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டு வருகிறது! இந்த முறை, உலகின் நாகரிக நாடுகளில் எல்லாம் பின்பற்றப்பட்டு வரும் நவீன கல்விக் கொள்கைக்கு முரண்பட்டதாகும் — மனித உரிமை சாசனத்துக்கு மாறுபட்டதாகும்!

'தரப்படுத்தல்' பற்றி யார் என்ன கூறினாலும் — என்ன விளக்கங்களைத் தந்தாலும்—தமிழ் மாணவர்கள் சிங்கள மாணவர்களைவிட கூடுதலாக பல்கலைக்கழகங்களுக்கு தெரிவு செய்யப்படுவதைத் தவிர்ப்பதற்காக குறுகிய இனவாத அடிப்படையில் வலிந்து புகுத்தப்பட்ட ஒரு மிலேச்சத்தனமான கொள்கை என்பதை எவருமே மறுக்கமுடியாது.

கல்வித்துறையில் பின்தங்கியிருக்கும் மாவட்ட மக்களைக் கைதூக்கிவிடவே இந்தத் தரப்படுத்தல் கொண்டுவரப்பட்டதாகக் கூறப்பட்டது அது உண்மையானால், கொழும்பு ரோயல் கல்லூரியில், சம அளவு கல்வி வாய்ப்பு பெறுகின்ற சிங்கள, தமிழ் மாணவர்களில்—தமிழ் மாணவன், சிங்கள மாணவனைவிட எதற்காக அதிகபுள்ளி பெறவேண்டும்? சகல வசதிகளுமுடைய கொழும்பு ரோயல்கல்லூரியில் படிக்கும் ஒரு சிங்கள மாணவரை விட, வடக்கு, கிழக்குமாகாணங்களில் வசதி குறைந்த ஒரு கிராமத்தில் படிக்கும் தமிழ் மாணவன் எதற்காக கூடுதல் புள்ளிகள் பெறவேண்டும்? என்று கேட்டோம்!

கல்வியமைச்சின் முகமூடி இந்தக் கேள்வியினால் கிழிக்கப்பட்டது; இதன் காரணமாக தரப்படுத்தல் நடைபெறவேயில்லையென்று முதலில் அறவே மறுத்த கல்வி அமைச்சர் பின்னர் அது நடைபெற்றதாக ஒப்புக்கொண்டார்.

இதன் பின்னர், சில காலத்துக்கு முன்—தரப்படுத்தல் பற்றி கல்வியமைச்சு மீண்டும் ஒரு அறிக்கை விடுத்தது; அந்த அறிக்கையும் — சிதம்பர சக்கரத்தை பேய் பார்த்ததுபோல் — என்று கூறுவார்களே அதுபோல் தரப்படுத்தல் — எப்படி எந்த அடிப்படையில் நடைபெறுகிறது என்பதைப் புரியவைக்கத் தவறிவிட்டது. ஆனால் மொழியடிப்படையில் தரப்படுத்தல் நடைபெற்றதென்பதை மட்டும் அது ஒப்புக்கொண்டது!

அதன் பின்னர், அண்மையில் 'தரப்படுத்தல்' பற்றி ஆராய்வதற்கு கல்வியமைச்சர் நிபுணர்கள் குழு ஒன்றை நியமித்திருந்தார். அமைச்சரால் நியமிக்கப்பட்ட அந்தக் குழு என்ன சொல்லும்? எல்லோரும் எதிர்பார்த்ததுபோலவே — தரப்படுத்தல் சிறந்த முறையென்றும் — அந்த முறையின் மூலம் பாரபட்சம் ஏற்பட இடமில்லையென்றும் — அதைத் தொடரலாம் என்று பரிந்துரைத்திருந்தது அத்துடன், 30 வீத மாணவர்களை திறமையடிப்படையிலும் — மீதி 70 வீதமானோரை பிரதேச, மொழி, இன அடிப்படையிலும் தெரிவு செய்யலாம் என்றும் சிபார்சு செய்திருந்தது.

இதைக்கண்ட அரசாங்க ஆதரவு ஏடான 'டெயிலி நியூஸ்' துள்ளிக்குதித்து தலையங்கம் தீட்டியது; கல்வியில் இன, மொழி, வேறுபாட்டைப் புகுத்தலாமா? தகுதி, திறமையே, உயர் கல்வி வழங்குவதற்கு அடிப்படையாக அமையவேண்டுமென்று 'கார்த்திகைப் பிறை கண்டது போல ஒரு ஆசிரிய தலையங்கம் தீட்டியது!

அடிக்கிறது போல அடி—அழுகிறதுபோல அழுகிறேன்' என்பதுபோல — 'டெயிலி நியூஸ்' ஆசிரியத் தலையங்கத்தை யடுத்து—பல்கலைக்கழக நுழைவில் இன, மொழி அடிப்படையை அரசு நிராகரித்துவிட்டதாக ஒரு முன்பக்கச் செய்தியை 'டெயிலி நியூஸ்' வெளியிட்டதுடன், மாவட்ட அடிப்படையில் மாணவர்களைத் தெரிவு செய்யும் முறையையே அமைச்சரவை விரும்புவதாகவும் தெரிவித்திருந்தது.

# 'பட்டினி சோசலிசத்தினால் மக்கள் பரிதவிக்கின்றனர்!'

## தேசிய பேரவையில் சிம்மக்குரலோன் வவுனியா செல்லத்தம்பு முழக்கம்!

'நாடு இன்று பெரும் உணவு நெருக்கடியில் சிக்கித் தவிக்கிறது. அதே வேளையில் நாட்டில் உண உற்பத்தியும் வீழ்ச்சியடைந்து வருவதை அவதானிக்க முடிகிறது.

இந்த ஆண்டை உற்பத்தி ஆண்டாகப் பிரகடனம் செய்தது. ஆனால் இந்த ஆண்டில் இதுவரை அவர்களுக்கு என்ன உற்பத்தி கிடைத்திருக்கிறது என்பதைக் கூற முடியாது காரணம் நாட்டின் உற்பத்தி மிக மோசமான நிலைக்கு வீழ்ச்சியடைந்து வருகிறது.

'இரண்டு கொத்து அரிசி தருவோம் எனக் கூறிப் பதவிக்கு வந்த இன்றைய ஆட்சியாளர்கள் தமது இந்த உறுதி மொழியின் ¼ பகுதியை அதாவது ½ கொத்தை வழங்குகின்றனர்.

'இதுதான் அவர்கள் கூறும் சோசலிசம். இந்த சோசலிசத்தை மக்கள் பட்டினி சோசலிசம் என்று தான் வர்ணிக்கின்றனர்.

'நெல் விளையும் பிரதேசமான எனது வவுனியாத் தொகுதியில் கூட அரிசியின் விலை இன்று ஆறு ரூபாவாக உயர்ந்திருக்கிறது. இதனால் ஏழை எளிய மக்கள் பட்டினியால் வாடுகின்றனர். இந்தப் பட்டினி நிலை இன்னும் எத்தனை நாளைக்கு நீடிக்கும் என்பதை ஆட்சியாளர் மக்களுக்குத் திட்டவட்டமாக கூற வேண்டும்.

'இலங்கைக்கு வழங்கும் அரிசியை அடுத்த ஆண்டில் இருந்து ஓரளவு குறைக்க சீனா திட்டமிட்டிருப்பதாகத் தெரிகிறது இதே வேளையில் உள்ளூரிலும் அரிசி உற்பத்தி எதிர்பார்த்தளவு இல்லை. இந் நிலையில் அரசாங்கம் அடுத்த ஆண்டில் இந்த அரைக் கொத்தையாவது கொடுக்குமா என்பது சந்தேகமாக இருக்கிறது.

'அரசாங்கம் இந்த நிலைமையை இப்பொழுதே மக்களுக்குக் கூறவேண்டும். எமது நிர்வாகம் தோற்றுவிட்டது எமது உற்பத்தி தோற்றுவிட்டது. எனவே அடுத்த ஆண்டில் நீங்கள் மேலும் பட்டினி கிடக்க வேண்டி வரும் என இப்போதே கூறுங்கள்.

இங்கு நான் வலியுறுத்திச் சொல்லும் கருத்துக்கு வர்த்தக மந்திரி செவிசாய்க்காவிட்டால் நான் இந்தச் சபைக்கு வெளியேயாவது இக்கருத்தை மந்திரியின் செவிகளில் விழக்கூடியவாறு வேறு வழிகள் மூலம் எடுத்துச் சொல்வேன்.

இலங்கரத்தினா:—நீர் என்னை சபைக்கு வெளியே பார்த்துக் கொள்வேன் என்று பயமுறுத்துகிறீர்; அது இங்கு நடக்காது வேண்டுமானால் வவுனியாவில் இப்படியான வேலைகளை வைத்துக் கொள்ளும்!

பீட்டர்கெனமன்:—இவ்விதம் ஒரு அங்கத்தவர் இன்னொரு அங்கத்தவரை பயமுறுத்த முடியாது என்று சேர் மொலமுரே போன்ற சபாநாயகர்கள் கட்டளையிட்டுள்ளார்கள் என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

செல்லத்தம்பு:— நான் யாரையும் பயமுறுத்தவில்லை சபைக்கு வெளியிலும் மந்திரியின் கொள்கையை எதிர்ப்பேன் என்று கூறினேன் நான் ஆங்கிலத்தில் IMPRESS என்ற சொல்லையே பயன்படுத்தினேன் கேம்பிரிட்ச் பல்கலைக் கழகத்தில் கல்வி கற்றவரான வீடமைப்பு அமைச்சர் (பீட்டர்கெனமன்) IMPRESS என்ற சொல்லுக்கு 'பயமுறுத்தல்' என்று வியாக்கியானம் அளிப்பாரானால், அதற்கு நான் என்ன செய்யமுடியும்?

'நாட்டில் இன்று அரிசி விலை இடத்திற்கு இடம் வேறுபடுகிறது. விலையும் அதிக அளவு உயர்ந்து வருகிறது. இதற்குக் காரணம் அரசாங்கம் கண்டகண்ட இடங்களில் எல்லாம் தடுப்பு முகாம்களை வைத்திருப்பது தான்.

'இதனால் மக்கள் பெரிதும் கஷ்டப்படுகின்றனர். தடை முகாம்களில் பணியாற்றுபவர்கள் பணம் தேடுகின்றனர். சட்டத்தையும் ஒழுங்கையும் மதியாதவர்களால் தான் இன்று அணிந்து அரிசி கொண்டு செல்லமுடிகிறது'

—இவ்வாறு தேசிய அரசப் பேரவையில் திரு. செல்லத்தம்பு கூறினார்.

# அநீதியை மூடி மறைக்கவே வெளிநாடுகளுக்குச் செல்லவிடாமல் எம்மைத் தடுக்கிறீர்கள்!

—ஆனந்த சங்கரி

'பிரதமரும் அவரைச் சார்ந்த அரசாங்க தரப்பினரும் எந்தத் தடையும் இன்றிச் சுதந்திரமாக எந்த நாட்டிற்கும் போய் வரமுடிகிறது. ஆனால் எதிர்க்கட்சியினரான எமக்கு அந்தச் சுதந்திரம், உரிமை மறுக்கப்படுகிறது.

'யாத்திரைக்காக இந்தியாவிற்குப்போய்வரக் கடவுச் சீட்டுக்கோரி நான் இரு தடவைகள் விண்ணப்பித்தேன். ஆனால் எனக்கு இந்த அனுமதி வழங்கப்படவில்லை.

அரசாங்க தரப்பினர்:- அரசியல் யாத்திரைக்கு அனுமதி கோரி இருப்பீர். அதனால்தான் கிடைக்கவில்லை.

ஆனந்தசங்கரி:- 'இந்த அரசாங்கம் தான் செய்யும் அநீதிகளை மூடி மறைப்பதற்காகத்தான் எமக்கு வெளிநாடு செல்ல அனுமதி மறுக்கிறது. அரசாங்கத்தைச் சார்ந்தோர்களுக்கு ஒரு நீதியும், எதிர்க் கட்சியினருக்கு ஒரு நீதியும் கடைப்பிடிக்கப்படுவது ஜனநாயகத்திற்கு முரணானதாகும்.

'இந்த நாட்டு மக்களான சிங்கள, தமிழ் மக்கள் சரிநிகர் சமானமாகச் சகல உரிமைகளையும் பெற்று வாழ வேண்டும். அதுதான் நாங்கள் கோருவது.

'எனவே அரசாங்கம் நொண்டிச் சாட்டுகளைக் கூறி ஒரு பகுதி மக்களின் உரிமைகளுக்கு முட்டுக் கட்டைபோடாது மனிதத் தன்மையுடன் நடந்து கொள்ள வேண்டும்.

'எமது பிரதமர் மூன்று பிள்ளைகளின் தாய். அவருக்குத் தாயுள்ளம் பற்றி நன்கு தெரியும். எமது இளைஞர்கள் 42 பேர் கடந்த 2½ ஆண்டு காலமாக எதுவித காரணமுமின்றிச் சிறையில் கிடந்து வாடுகிறார்கள். இவர்களைப்பெற்றெடுத்த தாயுள்ளங்களின் குமுறல் எப்படியிருக்கும் என்பது பிரதமருக்குத் தெரியாததல்ல.

எனவே இந்த இளைஞர்களை உடனடியாக விடுதலை செய்யுங்கள். இல்லையேல் இவர்களை நீதி மன்றங்

(7-ம் பக்கம் பார்க்க)

திறமை—தகுதியே பல்கலைக் கழக நுழைவுக்கு அடிப்படையாக இருக்கவேண்டுமென்று எழுதிய 'டெயிலி நியூஸ்' இந்த மாவட்ட அடிப்படை பற்றி இதுவரை மூச்சுக் கூட விடவில்லை!

மாவட்ட அடிப்படையென்றாலும்—இன மொழி, அடிப்படை என்றாலும், தமிழர்களைப் பொறுத்தவரை ஒன்றுதான்—இரண்டுமே தமிழ் மாணவர்களின் உயர் கல்வியை மட்டுப்படுத்தும் அடிப்படைச் சதித்திட்டத்திலிருந்து பிறந்தவைதான்!

எனவே இதுபற்றி மீண்டும் ஆராய்வதற்கு வீடமைப்பு அமைச்சர் பீட்டர் கெனமன் தலைமையில் நியமிக்கப்பட்டிருக்கும் 'செக்ரோறல்' குழுவுக்கு நாம் கூற விரும்புவது இதுதான்!

பல்கலைக்கழகப் புகுமுகப் பரீட்சையில் பரீட்சார்த்திகள் பெறும் புள்ளிகளை—தரப்படுத்தும் முறையை அடியோடு தூர வீசியெறிந்து விட்டு—பரீட்சார்த்திகள் புகுமுகப்பரீட்சையில் பெறுகின்ற மாற்றப்படாத புள்ளிகளின் அடிப்படையில், திறமை தகுதி, இவற்றை மட்டுமே முன்வைத்து பல்கலைக் கழகங்களுக்கு மாணவர்களைத் தெரிவு செய்யும் திட்டத்தை செயல்படுத்துங்கள்!—பல்கலைக்கழக அதிகாரிகளிடமே மீண்டும் அந்தப் பொறுப்பை ஒப்படையுங்கள்!

இப்படிச்செய்வதொன்றின் மூலமே தமிழ் மக்களின்—தமிழ் மாணவர்களின் விரக்தியைப்போக்க முடியும் என்பது மட்டுமல்ல; இந்நாட்டில் கல்வித்துறை புனிதமடையவும் முடியும்!

இதுவரை [illegible] முறையும் தமிழ் மாணவர்களுக்கு [illegible]வில்லை!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'ஆளுங்கட்சியினருடைய கருத்துக்களுக்கு செவிசாய்ப்பதுமட்டும் சனநாயகமாகாது'!

## இந்தப் பிரச்சினைமீது சேர் ஜோனுக்கு எதிராக நம்பிக்கையில்லாதீர்மானம் கொண்டுவந்தவர் என்.எம்.

## அன்று அவர் சுமத்திய குற்றச்சாட்டையே இன்று நாமும் சுமத்துகிறோம்!

### தேசிய அரசுப் பேரவையில் உடுவில் பா. உ.

'இன்றைய அரசாங்கம் தான் முற்போக்குக்கொள்கையை பின்பற்றுவதாக கூறிக்கொள்ளுகிறது. ஆனால் நடைமுறையில் சேர் ஜோன் கொத்தலாவலை, அவர் பிரதமராக இருந்த காலத்தில் பின்பற்றிய படுபிற்போக்கானகொள்கைகளையேஇந்த அரசாங்கமும் பின்பற்றி வருகிறது. சேர் ஜோன்கொத்தலாவலை, தனது கட்சி பா. உ.க்களும், தனது கட்சியைச்சேர்ந்த தேர்தலில் தோல்வியடைந்த பிரமுகர்களும்கூறிய கருத்துக்களையே ஏற்றார். மக்களால் தெரிவு செய்யப்பட்ட எதிர்க்கட்சிப் பிரதிநிதிகளுடைய கருத்துக்களுக்கு செவிசாய்க்க மறுத்தார். அதையேதான் இன்று நீங்களும் செய்கிறீர்கள்!

'எனக்குத் தெரியும்—பல அமைச்சர்கள், தேர்தலில் தோல்வியடைந்த தமது கட்சி வேட்பாளர்களினதும், சிறீலங்கா சுதந்திரக் கட்சி அமைப்பாளர்கள் என்று கூறப்படுபவர்களினதும் கருத்துக்களுக்கு மட்டுமே செவிசாய்த்து வருகிறார்கள். அத்தகைய அமைச்சர்களுக்கு எதிராக நாங்கள் ஒரு நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்தால், மாண்புமிகு நிதியமைச்சர் அதை ஆதரிப்பார் என்று எதிர்பார்க்கிறேன்.

'சேர் ஜோன் கொத்தலாவலை அரசாங்கம், தேர்தலில் தோல்வியடைந்த தன் கட்சிப்பிரமுகர்களதும், அரசாங்கக் கட்சி உறுப்பினர்களதும் கருத்துக்களுக்கு மட்டுமே செவி சாய்ப்பதாக குற்றம் சாட்டி, சேர் ஜோனுக்கு எதிராக 1954ம் ஆண்டு ஜூன் மாதம் 11ம் திகதி நிதியமைச்சர் (டாக்டர் என். எம்.) நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஒன்றைக் கொண்டு வந்து பின்வருமாறு பேசினார்:-

'பிரதிநிதித்துவம் இல்லாமல் வரி இல்லை' என்ற அடிப்படைத் தத்துவத்தின் மீதுதான் ஜனநாயகத்துக்கான போராட்டமே ஆரம்பிக்கப்பட்டது. ஜனநாயகத்தின் கரு. இந்த தத்துவத்தின் மீதே கட்டியெழுப்பப்பட்டது. உங்கள் கருத்தைக்கொண்டிருக்கவில்லை என்ற ஒரே காரணத்துக்காக மக்களின் பிரதிநிதிகளை நீங்கள் அங்கீகரிப்பதற்கு தயாராக இல்லையென்றால், 'இனிமேல் நாங்கள் வரி செலுத்தவும் மாட்டோம்; சட்டங்களுக்கு பணியவும் மாட்டோம்' என்று கூறுவதற்கு சம்பந்தப்பட்ட மக்களுக்கு பூரண உரிமையுண்டு.'

ரி. பி. இலங்கரத்தின:- பகிஷ்கரிப்பு என்னாச்சு?

தர்மலிங்கம்:- பகிஷ்கரிப்பதற்கு எங்களுக்கு பூரண உரிமையுண்டு—இதோ அப்போது. நிதியமைச்சர் மேலும் பேசியதைக்கேளுங்கள்:-

'சமஷ்டிக் கட்சியிலுள்ள எனது நல்ல நண்பர்கள் (அப்போது தமிழரசுக் கட்சி பா. உ. க்களாக இருந்தவர்கள் அமரர்கள் வன்னியசிங்கமும், இராசவரோதயமும்) திருப்பித் திருப்பி வற்புறுத்தி வருவதைப்போல — மக்களை அத்தகைய நிலைக்கே தள்ளிக்கொண்டுவருகிறீர்கள். குறிப்பாக சிறுபான்மை மக்களை, உங்கள் ஒற்றையாட்சி அரசமைப்புக்கு முரணான ஒரு நிலையை தோற்றுவிக்கும் சூழ்நிலைக்கு தள்ளிக்கொண்டிருக்கிறீர்கள்!

''பிரதிநிதித்துவம் என்பதன் பொருள், அரசாங்கத்தினால் உண்டாகும் இலாபங்களில் பங்கு கொள்ளும் உரிமையேயாகும். இந்த உரிமையை நீங்கள் மறுத்தால்— மக்களில் சில பிரிவினரின் குடியுரிமையையே இல்லாமல செய்யப்போகிறீர்கள். பிரதமர், தமது இந்தத் திட்டத்தால், இந்த நாட்டு மக்களில் பெருவாரியான பிரிவினரின் வாக்குரிமையைப் பறிக்கின்றார். இதை வெளிப்படையாக செய்யாமல், மறைமுகமாகச் செய்கிறார்; ''உங்களுக்கு வாக்குரிமை கிடையாது'' என்று கூறுவதற்கு அவர் பயப்படுகிறார். ஆனால் — உண்மையில், தான் ஆட்சி நடத்தும் முறையால் — ''உங்கள் வாக்குக்கு பெறுமதி இல்லை; ஏனெனில், நீங்கள் ஆதரிக்கும் ஆள் தேர்ந்தெடுக்கப்பட்டாலும், அவர் தெரிவிக்கும் கருத்துக்கள் கவனிக்கப்படமாட்டார் என் முன்னால் சமர்ப்பிக்கப்படும் அவரது கருத்துக்கள் ஒரு போதும் பரிசிலனைக்கு எடுக்கப்படமாட்டாது; நீங்கள் வேண்டுமானால் கூறிக்கொள்ளலாம் — உங்களுக்கு வாக்குரிமை இல்லையென்று'' — இதைத்தான் அந்தக் கனவான் (சேர் ஜோன்) கூறுகின்றார்.

''அரசாங்கத்தினால் ஏற்படும் நன்மைகளில் பூரண பங்கு மக்களுக்கு இல்லையென்றால் — சன நாயகம் என்பது என்ன? பெரும்பான்மைக்கட்சியின் ஆட்சியென்பது மட்டும்தானா ஜனநாயகம்?

''சனநாயக அரசு என்பது எண்ணிக்கையில் பெரும்பான்மைகொண்ட ஒரு அரசாங்கம் மட்டும் அல்ல—சிறுபான்மையினரின் கருத்துக்களுக்கும் செவிமடுக்கும் அரசாங்கமே சனநாயக அரசாங்கம் இதுவே சனநாயகத்தின் தாற்பரியமாகும். நீங்கள் சிறுபான்மையினரின் கருத்துக்களுக்கு செவிமடுக்கத் தயாரில்லையென்றால்—சனநாயகம் நீண்ட காலத்துக்கு நிலவ முடியாது — பாசிசத்தின் — சர்வாதிகாரத்தின்—தொடக்கமே அதுதான்!''

—இப்படி டாக்டர் என். எம். பெரேராவின் பேச்சை வாசித்துக் காட்டிய திரு. தர்மலிங்கம், ''உங்கள் மீது இன்று இந்த குற்றத்தைத்தான் நாங்களும் சுமத்துகிறோம்.'' என்று கூறிவிட்டு, டாக்டர் என். எம். பெரேராவின் பேச்சைத் தொடர்ந்து படித்தார்.

''எல்லாவற்றையும்விட கெடுதியானது - அரசாங்க அதிகாரிகளை நீங்கள் ஊழல் பேர்வழிகளாக்குவது தான். எப்படி? யூ.என்.பி. உறுப்பினர்களின்கருத்துக்களுக்கு மட்டுமே செவிசாய்ப்பது என்று அரசு முடிவெடுத்தவுடன் — நீதி நியாயத்துடனும், நடுநிலைமையுடனும் தங்கள் நிர்வாகக் கடமைகளை ஆற்றினால், எங்கே அரசாங்கத்தின் கண்களில் தாங்கள் சந்தேகத்துக்குரிய நபர்களாகி விடுவோமோ என்று அரசாங்க அதிகாரிகள் அஞ்சுவார்கள். ஏனெனில், யூ. என். பி. உறுப்பினர்களுக்கும் யூ.என்.பி. ஆதரவாளர்களுக்கும் மட்டுமே உதவி செய்யும் அதிகாரிகளையே அரசாங்கம் அங்கீகரிக்கும். நிலைமை எவ்வளவு ஆபத்தாக உருவாகிறதென்பதைப் பாருங்கள்! இந்த முறையை பின்பற்றினால், முழுக்க முழுக்க ஊழல் அமைப்பே உண்டாகும் என்பது திண்ணம்!!

(பாராளுமன்ற அதிகார அறிக்கை—11 ஜூன் 1954 — தொகுதி 17 — கொலம் 1132—3)

— இவ்வாறு வரவுசெலவுத்திட்டகுழு நிலை விவாதத்தில் பேசிய உடுவில் பா. உ. வி. தர்மலிங்கம் குறிப்பிட்டார்.

---

#### ஜனநாயகப் போர்வையின் கீழ்

# ஒருகட்சி சர்வாதிகாரத்தை இங்கு கொண்டுவரச் சதி!

## தேசிய அரசுப் பேரவையில் காவலூர் பா.உ. அம்பலப்படுத்தினர்!

''இந்த நாட்டிலே உண்மையாக பாராளுமன்ற நடைமுறை இருக்கிறதா? பாராளுமன்ற ஆட்சி நடைபெறுகிறதா? என்றுதான் கேட்கிறோம். இந்த நாட்டிலே சோசலிசம் கால் கொள்ளவேண்டுமென்றால் - உண்மையான சமதர்மம் விரைவில் நிலைக்கவேண்டும் என்றால்—உண்மையான கம்யூனிசம் இடம்பெறவேண்டுமென்று கருதுகிறவர்கள் யாராவது இருந்தால்—இவற்றைப் பாராளுமன்ற முறைப்படி உடனே புகுத்த முடியாது என்பதைக் கூற விரும்புகிறேன்.

பாராளுமன்ற முறையிலே எங்கேனும் ஒரு சோசலிச முறை நிலை நாட்டப்பட்டுளதா? இப்பொழுது 'சிலி' தேசத்திலே நடந்தது எல்லோருக்கும் தெரியும்;

### ஒருகட்சி ஆட்சிக்குச் சூழ்ச்சி

பாராளுமன்ற ஆட்சிக்கும், சர்வாதிகார ஆட்சிக்கு வழிவகுக்கும் ஒரு கட்சி ஆட்சிக்கும் இடையிலே இப்பொழுது இலங்கையில் ஒரு போட்டி நடந்துகொண்டிருக்கிறது. பாராளுமன்ற ஆட்சிமுறை என்ற போர்வையில் ஒரு கட்சி ஆட்சியை இந்த நாட்டிலே நிலைநாட்டச் சூழ்ச்சி செய்யப்படுகிறது. ஒரு கட்சி ஆட்சி என்று நான் குறிப்பிடுவது ஐக்கிய முன்னணி ஆட்சியையோ, ஒரு குடும்ப ஆட்சியையோ குறிக்கும். ஜனநாயகம் என்ற போர்வையிலே ஐக்கிய முன்னணி ஆட்சியையோ ஒரு குடும்ப ஆட்சியையோ நிலைநாட்ட நடைமுறைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதை விரித்துவிளக்க விரும்புகிறேன்;

ஒரு கட்சி ஆட்சியிலே எதிர்க்கட்சிகள் பங்குபெற முடியவில்லை எனக் கூறுகிறேன். இணக்கச் சபைகள், மக்கள் குழுக்கள், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், பயிர்ச் செய்கைக் குழுக்கள், சனசமூக நிலையங்கள், கிராம முன்னேற்றச் சங்கங்கள் முதலியனவெல்லாம் ஒவ்வொரு தொகுதியிலும் அந்தந்த பாராளுமன்ற உறுப்பினர்களுடைய எண்ணப்படி அமைக்கப்படுகின்றன. இவற்றுக்கு எங்களுடைய தொகுதிகளிலே — அரசாங்கக் கட்சி உறுப்பினர்கள் இல்லாத தொகுதிகளிலே— சுதந்திரக் கட்சி அமைப்பாளர்களான சில பொம்மைகளுடைய எண்ணப்படி நியமனங்கள் நடைபெறுகின்றன.

எனவே, இலங்கை முழுவதும் ஒவ்வொரு அரசாங்க பாராளுமன்ற உறுப்பினரும் தாம்விரும்பிய மக்கள் குழுக்களை — தாம் விரும்பிய சனசமூகநிலைய உத்தியோகத்தர்களை—தாம் விரும்பிய கிராம முன்னேற்றச் சங்க உத்தியோகத்தர்களை — தாம் விரும்பிய நல்லிணக்கச்சபை உத்தியோகத்தர்களை—தாம் விரும்பிய பல நோக்குக் கூட்டுறவுச் சங்க இயக்குநர்களை நியமிக்கிறார். மிகுதியாகக் கிராமச்சபை ஒன்றுதான் இருக்கிறது. இக்கிராமச்சபை உறுப்பினர்களையும் அரசாங்கமே நியமிப்பதற்காக அரசாங்கம் சில திட்டங்களை வகுத்துவருகிறது.

இன்றுவரை பல கிராமச் சபைகள் கலைக்கப்பட்டன; கிராமச்சபைகளுக்கு தேர்தல் நடாத்த வேண்டியிருக்கிறது. பாராளுமன்ற இடைத்தேர்தல்கள் பலவற்றை நடாத்திய அரசாங்கம் இன்னும் ஒரு கிராம சபைத் தேர்தலைக்கூட நடத்தாமல் இருக்கிறது. ஏனென்றால், தேர்தலை நடாத்தினால் தங்களுக்குத் தோல்வி ஏற்பட்டுவிடும் என்ற பயம் அரசாங்கத்துக்கு.

ஆகவே, இப்படியாக எல்லாவற்றையும் ஆளும்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களுடைய எண்ணப்படி நடாத்திவிட்டு தேர்தலுக்குப் போகும்போது இப்பொழுது அந்த உத்தியோகத்தில் இருக்கிற அவ்வளவு பேரும் தொடர்ந்து இருக்க வேண்டுமானால் அந்தப் பாராளுமன்ற உறுப்பினர் மீண்டும் வெல்லவேண்டும். ஒரு கட்சி ஆட்சியைப் புகுத்துவதற்குத்தான் இந்தச் சூழ்ச்சிகள் எல்லாம் நடைபெறுகின்றன என்பதை நான் இங்கே வற்புறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

### மாவட்ட அபிவிருத்திக்கு யார் பொறுப்பு?

இந்த வரவு செலவுத் திட்டத்திலே மாவட்ட அடிப்படையாக இலட்சக்கணக்கான ரூபா அபிவிருத்தித் திட்டத்துக்காக ஒதுக்கப்பட்டுள. இந்த அபிவிருத்தித் திட்டம் பாராளுமன்ற உறுப்பினர்களுடைய அனுசரணையுடன் நடைமுறைப் படுத்தப்படும் என்று இந்த வரவு செலவுத் திட்டத்தில் முதல்முறையாகக் கூறப்பட்டுள்ளது. ஆனால், அதிலே ஒரு அடிக்குறிப்பு எழுதவேண்டும். 'பாராளுமன்ற உறுப்பினர்கள் என்று குறிப்பிடுவது அரசாங்கக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் தாம். எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அல்லர்' என்று புறக்குறிப்பு எழுதப்படவேண்டும் என்று கூற விரும்புகிறேன்.

மாண்புமிகு பாராளுமன்ற அலுவல்கள் விளையாட்டுத் துறை அமைச்சர் இங்கே இருக்கிறார். சென்ற வரவு செலவுத் திட்டத்தின் விவாதத்தின் போது அவர் 'மாவட்ட அடிப்படையில் பணம் பிரித்துக்கொடுக்கப்படும் பாராளுமன்ற உறுப்பினர் பொறுப்பாக இருப்பார்கள்' என்று கூறிய பொழுது நான் கேட்டேன். 'எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களுமோ' என்று. 'ஆம்' என்று அவர் சொன்னார். ஆனால் இப்பொழுது எந்த அபிவிருத்திச் சபையிலோ அரசியல் அதிகார சபையிலோ எதிர்க்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்குப் போதிய இடம் கொடுக்கப்படவில்லை. மாவட்டரீதியாக ஒதுக்கப்பட்டிருக்கிற பணமும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் செலவு செய்யத்தக்கதாக இருக்குமா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

இந்த கேள்விக்கு இப்பொழுது மறுமொழி கூற விரும்

(6-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எதற்காக

அம்மா......!
உன்னை இகழ்ந்தவர்கள்......
பழித்துரைத்தவர்கள்.
இன்று —
உன் புதல்வர்களை
தம் பாதங்களைக் கழுவி
முத்தமிட —
அழைக்கின்றார்களே!
தாயே——!
கழுகு மர மேற்றி
என்னுடலைக்கிழித்திடினும்
உன் புகழ் பாடியே
இறப்பேன்......
ஆனாலோ — உன்புதல்வர்
சிலரோ!
முத்த மிட்டு தாள் பணிய
சம்மதமே!......
என்னிதயம் கசிந்து
மானசீகமாக —
கண்ணீர் வடிக்கின்றேன்
இவையெல்லாம்......
எதற்காக?

— பூநகர் மரியதாஸ்

## சோசலிசவாதி!

அழகான மேடையினில்
அரசாங்க மந்திரி
பேசுகின்றார்
நாங்கள்
சோசலிசவாதிகள்
ஜனநாயகமெங்கள்
உயிர் மூச்சு
ஆனால்
ஒருமொழி
ஒருமதம்
இதுதான்
எங்கள் நாட்டில்
நிலைக்க வேண்டும்
மற்றைய வெல்லாம்
அழிய வேண்டும்
இதை எதிர்ப்பவர்கள்
பிற்போக்கு வாதிகள்
இவர்களை யெல்லாம்
இராணுவத்தைக் கொண்டு
சுட்டுத்தள்ளவும்
தயங்கமாட்டோம்

— நெடுங்கேணி நவம்

## ஒரே வழி

புதுயுகம் வருமென்று
பெய்யுகம் காட்டிடும்
சிதறுண்ட —
நாவினில் நரம்பில்லா
கம்யூனிஸ்டுகளே......!
தேசிய வாதமும்
பொதுவுடமையும்
பேசிட—உங்களுக்கு
"வக்கு" இல்லை
ஒரேயொரு வழிதான்
உள்ளது கேளீர்!
உங்கள் நாவுகளை
பிடுங்கி—
இந்து சமுத்திரத்தில்
வீழ்ந்து விடுங்கள்!

— தமிழ்திரு

## சுரண்டல்!

தரிசு நிலத்தில்
ஆளும் இனம்
குடியேறலாம்—
பரிசும் கிடைக்கும்
அது
அவர்களுக்கு—
விரட்டப்படுகின்றார்
தமிழர் அங்கிருந்து
மேலும்
சுரண்டப்படுகின்றார்
அவர் என்றும்!

## ஜாலம்

ஏமாற்றும் நோக்கோடு
ஆள்வோர் எமை
அழைத்து
ஏதாகிலும் தந்து
காலம் போக்கிச்
சில காலம் கழித்து
ஜாலம் செய்து
பறிப்பார்!

— அளவை குமாரன்

## ஒருகட்சி..

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

பினால் பாராளுமன்ற விளையாட்டுத்துறை அமைச்சர் அவர்களுக்கு நான் இப்பொழுது இடம் கொடுக்கத் தயாராக இருக்கிறேன். உதவி அமைச்சர் மறுமொழி கொடுப்பதிலும் பார்க்க நான் ஓர் அமைச்சர் வாயால் அந்தமறுமொழியைக்கேட்க விரும்புகிறேன். ஆம் அல்லது இல்லை என்று கூறட்டும்.

# தமிழ் ஈழத்தின் தங்கக்காளைகளுக்கு

# தமிழ் இளைஞர் பேரவைவிடுக்கும்மடல்!

தமிழ் இளைஞனே,

தமிழ் இளைஞர் பேரவை பற்றி ஒரு சில வார்த்தைகள். உனக்குக் கூறவிரும்புகிறேன்; ஏன் தெரியுமா? நீ கேட்கிறாய்! உலகில் எந்த இளைஞர் இயக்கமாவது அறத்திலே நம்பிக்கை வைத்ததுண்டா, எந்த இளைஞர் இயக்கமாவது அறவழியிலே போராடி வெற்றி கண்டதுண்டா, நம் கண்முன்னாலே தோன்றிய வங்காள தேசத்தில் கூட 'முக்தி பாகினி' என்ற பலாத்கார இளைஞர் இயக்கந்தானே முன்னின்று போராடியது. கரிபால்டி பின்னாலோ, லெனின் பின்னாலோ, மாவோ பின்னாலோ போன இளைஞர்கள் வெற்றி கண்டார்கள்! ஆனால் அவர்கள் அறவழியில் போராடவா போனார்கள் என்றெல்லாம் பல்வேறுபட்ட கேள்விகளை உன் இளமைத் துடிப்பால் கேட்கிறாய்.

இவற்றையெல்லாம் நானும் இளைஞன் என்ற காரணத்தால் ஒப்புக்கொள்கிறேன். ஆனால் ஒன்றை மட்டும் நினைவிலிருத்திக் கொள்! நம் தமிழ் பொய்யாமொழிப் புலவன் அன்றே கூறினான் 'பகல் வெல்லும் கூகையைக் காக்கை — இகல் வெல்லும் வேந்தர்க்கு வேண்டும் பொழுது' என்றான் எனவே எப்போராட்டமாயினும் காலமறிந்து நேரமறிந்து. ஆழமறிந்து, மாற்றான் வலியறிந்து தன்வலியுணர்ந்து போர்தொடுத்துப் பல நாடுகளை வெற்றி கண்ட இனத்தைச் சார்ந்தவர் நாம்.

### கடமை பலவுண்டு

நம் கண் முன்னேயே நம் சிங்களசகோதரர்கள் பலாத்காரக் கிளர்ச்சியை உருவாக்கி எவ்வளவோ பல வகையான சக்தி பொருந்திய ஆயுதங்களைக் கொண்டு போராடியும் தோல்வியை அரவணைத்ததை நீகண்டிருப்பாய் அல்லவா! எனவே நமக்கும் ஒரு கால முண்டு. அக்காலம் வரும் பொழுது நாமும் வேறு வழியைக் கடைப்பிடிப்போம்.

நீ போராடப் போகு முன் உனக்குப் பல கடமைகளுண்டு. என்னவென்று கேட்கிறாயா? எம் இனத்தினுள்ளே புரையோடிப் போயிருக்கிறது சாதிவேறுபாடு; இச்சாதி வேறுபாட்டுக்கு சாவு மணி அடிக்கும் வரை நாம் போராடத் தகுதியற்றவர்கள். அது மட்டுமல்ல இன்னும் பல சமுதாயக் கொடுமைகள் எம்மினத்தைப் பிரித்துவைத்திருக்கின்றன. மத வேறுபாடு இருக்கின்றதே அதுவும் நம்மினத்தை இன்று கூறுபோட்டு வைத்திருப்பதை கவனித்தாயா? இந்துவும், கிறிஸ்தவனும் சேர்ந்து விட்டார்கள்; ஏனோ இஸ்லாமிய இளைஞர்களில் பெரும்பாலோர் தம் மொழியையே மறந்து விட்டார்கள் — பிரித்து ஆளும் தந்திரத்தைக் கையாளுகிறது. சிங்கள ஆட்சி. அதற்குப் பலியாகிக் கொண்டிருக்கிறார்கள் இஸ்லாமிய இளைஞர்கள் பலர்! ஏன் என்று சிந்தித்தாயா?இது மதவேறுபாட்டினடியில் வந்த வினை!

அது மட்டுமா? யாழ்ப்பாணத்தான், வன்னியான், மட்டக்களப்பான், திருகோணமலையான், தோட்டக்காட்டான் என்றெல்லாம் பல பெயர்களைக் கொடுத்து இனத்தைப் பிரிக்கிறார்களே இதை ஒழிக்க — நினைத்தாயா? இது மட்டுமா எம்சகோதரிகள் பலர் தவிக்கின்றார் வாழ்வின்றி — ஏன் தெரியுமா? சீதனத்தின் கொடுமை! இதையெல்லாம் நாம் முதலில் களைந்தெறிய வேண்டாமா? மாற்றான் முன்னால் போக முன் நம்மை நாம் சரிப்படுத்திக்கொள்ளவேண்டும். எனவே எழு முதலில்! சமுதாயத்தைத் திருத்துவோம்; பின்னால் போராடுவோம்.

### சிந்தி!

இன்று எத்தனை இலங்கைத் தமிழர்கள் வேலையிழக்கிறார்கள் தெரியுமா? எத்தனை மலையகத் தொழிலாளர் வேலையில்லாமல் வீதிகளில் பிச்சையெடுத்தும் எச்சில் இலைக்காக நாயுடன் போராடும் நிலைக்கும் தள்ளப்பட்டிருக்கிறார்கள் தெரியுமா? இவையெல்லாம் உனக்கெங்கே தெரியப் போகிறது. வளர்ந்துவிட்ட விஞ்ஞான உலகத்தில் துப்பாக்கியை பற்றி மட்டும் சிந்திக்கும் நீ முதலில் உன் இனம் என்ன நிலையில் இருக்கிறது என்பதைக் கொஞ்சம் சிந்தித்துப் பார்.

ஈழத் தமிழினத்திற்காகத் தன்னை முற்றும் அர்ப்பணித்து விட்ட என் உடன் பிறவாத தம்பி பிரான்சிஸ் அவர்களின் தந்தையாருக்கு இவ்வருடம் மார்கழி மாதம் 31ந் திகதியிலிருந்து வேலையில்லை! ஏன் தெரியுமா? சிங்களத் தேர்ச்சியின்மை! அவருக்கு மட்டுமல்ல, வடமாகாணம் முழுவதிலுமுள்ள விவசாய அதிகாரிகள் 99 பேரில் 50 பேருக்கு வேலையில்லை. காரணம் சிங்களத் தேர்ச்சியின்மை இதே காரணத்தினால் கச்சேரி அலுவலகங்களிலுள்ள 1760 பேருக்கு வேலை நீக்க அறிவித்தல் போயுள்ளது சில நாட்களுக்கு முன்பு!

இவ்வருடம் மார்கழி மாதம் 31ந் திகதியிலிருந்து இலங்கை முழுவதிலுமுள்ள தமிழ் உத்தியோகத்தர்களில் 33000 பேருக்கு வேலையில்லாமல் போகப் போவதாக அறிந்தேன். அதை நான் உடனே நம்பவில்லை. ஆனால் இப்பொழுது அது உண்மையாகிக் கொண்டு போவதைப் பார்க்கும் பொழுது என் நெஞ்சம் குமுறுகின்றது.

எனவே இளைஞனே! வேலையில்லா நிலையை எமது இனம் முழுவதும் அடைந்தால் நிச்சயம் எம் இனம் அழிந்தே தீரும் வேலையில்லாவிட்டால் கல்வி கற்றும் நிலை இல்லை! வயிறும் நிறையும் நிலை இல்லை. இவ்வாறாக இறப்பவர் போக மிகுதியாயிருப்போரும்முட்டாள்கள் ஆகும் நிலைவரப் போகின்றது. எனவே உன் இனத்தைப் பற்றி வீட்டு மூலையிலிருந்து சிந்திக்காமல் அறவழியில் எம்முடன் போராட வீதிக்கு வா!

எக்காரணம் கொண்டும் தேர்தல் களத்தைப் பற்றிச் சிந்திக்காது. தேர்தலைப் பற்றிச் சிந்திப்போம் — எப்போது தெரியுமா? எமக்கென்று ஒரு நாடு அதுதான் தமிழ் ஈழம் அமைந்து விட்ட பின்னர்! அங்குதான் எமது சிந்தனை அவ்வாறு இருக்கலாம்.

### கொள்கை

எமது கொள்கையைப் பற்றி அன்னா நடையில் சொல்வதானால்,

அரசியலில் சிங்கள ஆதிக்கத்தினின்று விடுதலை;

பொருளாதாரத்தில் சமவுடைமை.

சமுதாயத்தில் சீர்திருத்தம்.

இவற்றையடையும் வரை எமது சிந்தனை, செயல், உழைப்பு, திறன் என்பன வேறு எதற்காகவும் செலவிடப்படமாட்டாது. எம்முடன் சேர்ந்தவர் ஒவ்வொருவரின் உயிரும் உடலும் இன்பத் தமிழ் ஈழத்திற்காகவே செலவிடப்படும்.

எம் இளைஞர் சமுதாயத்தின் மத்தியில் உத்தியோக மோக மனப்பான்மை வேரூன்றிவிட்டதுஇதைக் காணும்பொழுது வெட்கப்பட வேண்டியதாயுள்ளது. ஏன் தெரியுமா? ஒவ்வொருவனுடைய நாளாந்தச் செலவு இன்று ஏறத்தாழ 200/க்கு மேல் தேவை. ஆனால் எம் இளைஞர்கள் 150/ கிடைக்கும் ஒரு உத்தியோகமானாலும் சரி கிடைப்பது கோடி புண்ணியம் என நினைத்துக் கொண்டு எத்தனை பேரின் காலைப் பிடித்து கையைப் பிடித்து அதை எடுக்க முயற்சிக்கின்றனர் தெரியுமா?

அதிலும் குறிப்பாக யாழ் நகர இளைஞர்களில் சிலர் மாநகர சபையிலும், பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கடையிலும் வேலை யெடுக்கலாம் என்ற நோக்கத்துடன் தங்கள் இலட்சியம், தன்மானம் எல்லாவற்றையும் விற்று ஒரு 100 ரூபா சம்பள வேலைக்காக ஒரு இனத் துரோகியின் காலைப் பிடித்து அவர் கட்டளைப்படி ஒரு சிறீலங்கா சுதந்திரக்கட்சிக் கிளையை யாருடைய வீட்டிலாவது திறக்க முன் வருகிறார்கள்.

இவ்வாறான இளைஞர்கள் எம் சமுதாயத்தில் மலிந்து விட்டதைக் காணக் கூடியதாயிருக்கிறது. எம் இளைஞர்கள் சிந்திக்கும் ஆற்றலையே கைவிட்டு விடுகிறார்கள். எந்த நாடாயினும் சரி இளைஞர்கள் சிந்திக்கத் தவறினால் அந் நாடு விடுதலை பெற்றதாக வரலாறு இல்லை.

இளைஞனே உனக்குக் கூறும் புத்திமதி! இன்றுடன் வீட்டு மூலையிலிருந்து சிந்திப்பதை விட்டு விட்டு தமிழ் இளைஞர் பேரவையில் ஓர் உறுப்பினனாகச் சேர்ந்து உன் இனத்திற்காக, உன் மொழிக்காக உன் நாட்டிற்காக உழைப்பதற்கு முன்வருவாயாக.

அதற்கு முன் ஒரு சொல் எம் இயக்கத்தின் உறுப்பினனாவதாயிருந்தால் கடமையுணர்ந்து செயல் படவேண்டும். இயக்கத்தின் கட்டுப்பாடுகளுக்கு அமைய வேண்டும் சமுதாயத்தில் ஒரு கண்ணியமுள்ள இளைஞனாக நடமாட வேண்டும். அதாவது கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்பனவற்றைத் தனது தாரக மந்திரமாகக் கொள்ள வேண்டும்.

தமிழ் இளைஞர் பேரவை பற்றிய கொள்கை விளக்கம்:-

கொள்கை:- தமிழன் தமிழனாக தன் மானத்துடன் தலை நிமிர்ந்து வாழ தமிழனைத் தமிழனே ஆளவேண்டும்.

கடமைகள்:-

1. சாதி, மத, பிரதேச பேதமற்ற ஒரு சமதர்ம சுயாட்சித் தமிழ் ஈழத்தை உருவாக்கல்.

2. தமிழினம் பொருளாதார விடுதலை காண உழைத்தல்.

3. தமிழனின்மொழி, கலை, கலாச்சாரம், பண்பாடு, நாகரீகம், போன்றவற்றிற்கு மீண்டும் புத்தொளி கொடுத்தல்.

4. தமிழின விடுதலைக்கு போராடும் அறவழி இயக்கங்களுக்கு பூரண ஒத்துழைப்புக் கொடுத்தல்.

5 உலகத் தமிழரிடையே ஒன்று பட்ட குரலை உருவாக்கல்.

வழி:- அற வழியே எம் வழி!

இவையே எமது விளக்கங்கள்.

இப்படிக்கு,
'தமிழ் வளவன்.'

## இளைய ஈழம்

துணுக்கு

### பாண் பங்கீடு பாரீர்

ஒருவர்:— ஐந்து பேர் கொண்ட ஒரு குடும்பத்திற்கு ஒரு இருத்தல் வீதம் கூட்டுறவுக் கடைகளில் பாண் பங்கீடு செய்கிறார்களாமே ... ஐந்து பேருக்கு ஒரு இருத்தல் போதுமா?

மற்றவர்: — ஓபோதுமே, அதை ஐந்து துண்டுகளாக வெட்டி, ஒரு துண்டு பாண், அரைக்கோழி, ஒரு பொரித்த மீன், இரண்டு முட்டை, இப்படியே அமைச்சர் பாணியில் உண்ண வேண்டியதுதானே!

— எஸ். பி. கே

## தரபபடுத்தல் தொடர்ந்து இருக்குமாம்!

தமிழ் மாணவர் உயர் கல்வித்துறையில் பாரபட்சம் காட்டி ஒதுக்கப்படுவதற்கு காரணமாக உள்ளதென தமிழ்த் தலைவர்களாலும் தமிழ் பெற்றோர்களாலும் மாணவராலும் கருதப்படும் தற்போதைய தரப்படுத்தல் முறை தொடர்ந்து அமுலில் இருக்கும்.

தரப்படுத்தல் முறைபற்றி ஆராய்வதற்கென கலவியமைச்சரால் நியமிக்கப்பட்ட ஆய்வுக்குழு இப்போதைய தரப்படுத்தல் முறை மேலும் நீடிக்கப்படலாம் என்றும், இந்த முறையால் எவ்வித பாரபட்சமும் யாருக்கும் ஏற்படாது என்றும் பரிந்துரைத்துள்ளது.

வடமாகாண மாணவர்களும், மேல் மாகாணமாணவர்களுமே விஞ்ஞான துறையை ஆக்கிரமித்துள்ளதாகவும் இக்குழு சுட்டிக் காட்டியுள்ளதாம்—

பல்கலைக்கழகத் தெரிவுக்கு 30வீதம் திறமை அடிப்படையிலும், எஞ்சிய 70வீதம் பிரதேச மக்கள் தொகையடிப்படையிலும், இன அடிப்படையிலும் ஒதுக்கப்படவேண்டும் என்றும் சிபார்சு செய்யப்பட்டுள்ளதாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டணி தீர்மானங்கள்!

2-12-73ல் தந்தைசெல்வா தலைமையில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தமிழர் கூட்டணி நடவடிக்கைக் குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:-

## (1) தடைகளை அகற்றுக!

அரசாங்கம் எவ்விதமான முன்னேற்பாடும் செய்யாமல் இலவச அரிசியை அரைப்படியாகக் குறைத்தும் இரண்டாவது பங்கீட்டரிசியை நிறுத்திய நடவடிக்கைகளினால் ஏறிக்கொண்டுபோகும் அரிசிவிலையைக் கட்டுப்படுத்தும் பொருட்டு 2படி அரிசியை பங்கீட்டில் வழங்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

'அரசாங்கம் அரிசி உற்பத்திப் பகுதியிலிருந்து பற்றாக்குறைப் பகுதிகளுக்கு அரிசி கொண்டுசெல்வதற்குத் தடைமுகாம்கள் போடப்பட்டுள்ளதால், யாழ்ப்பாணப் பகுதியில் அரிசியின் விலை நாட்டின் எப்பகுதியைக் காட்டிலும் உயர்ந்து விட்டது. இத்தடைகளை நீக்கி மக்கள் உணவுக்கு அரிசி கொண்டுசெல்ல வழி வகுக்கவேண்டும்.

## (2) நிலம் வழங்குக!

வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள அரசாங்க நிலங்களில் விவசாயத்தில் ஈடுபடவிரும்பும் தமிழ் வாலிபர்களுக்கும் விவசாயிகளுக்கும் நிலம் வழங்குவதில் பாகுபாடு காட்டாது. உடனடியாக வழங்கி, உணவு உற்பத்தியில் மக்களை ஊக்கப்படுத்தவேண்டும் என்று அரசைக்கோருகிறது.

## (3) அரசியல் அதிகாரிகளை மாற்றுக!

'வடக்கு கிழக்கு மாகாணங்களில் மாவட்ட அரசியல் அதிகாரிகளாக அப்பகுதித் தமிழ் மக்களின் நம்பிக்கையைப்பெருதவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். அப்பதவிகளுக்கு அவர்களை அங்கீகரிக்காமல் அவர்களை உடனடியாக நீக்கி, அவ்வப் பகுதி மக்களின் நம்பிக்கையைப் பெற்றவர்கள் நியமிக்கப்படவேண்டும்.

## (4) தரப்படுத்தலுக்கு கண்டனம்!

பல்கலைக்கழக புகுமுகப் பரீட்சையில், பரீட்சார்த்திகள் பெறும் 'எவ்வகையாலும் மாற்றப்படாத்' புள்ளிகளை அடிப்படையாகக்கொண்டே பல்கலைக்கழக அதிகாரிகளினால் பிரவேசத்திற்கு மாணவர் தெரிவுசெய்யப்படவேண்டுமேயன்றி பரீட்சைத் திணைக்களத்தில் புள்ளிகள் பாரபட்சமான முறையில் மாற்றப்பட்டபின்பு, அவை பல்கலைக்கழகங்களுக்கு அனுப்பப்பட்டு தெரிவு நடைபெறுவதை தமிழர் கூட்டணி வன்மையாக கண்டிக்கிறது.

## (5) தமிழ் இளைஞர்களை விடுதலை செய்!

சிறையில் வைக்கப்பட்டிருக்கும் தமிழ் இளைஞர்களை தமிழர் கூட்டணி பல தடவை வற்புறுத்தியும் அரசாங்கம் விடுதலைசெய்யவோ நீதிமன்றத்தில் விசாரணைக்கு நிறுத்தவோ முன்வரவில்லை. தமிழர் கூட்டணி இதனைக் கண்டிப்பதுடன் அவர்களை விடுதலைசெய்யுமாறு வற்புறுத்துகிறது.

---

# வடக்கில் பயங்கர உணவு....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மாக வாடவேண்டிய பரிதாப சூழ்நிலை வடபகுதியில் தோன்றியுள்ளது. பாண், மா போன்றவற்றுக்கும் பெரும் தட்டுப்பாடு யாழ்ப்பாணத்தில் இருந்துவருறது. கியூவில் கால்கடுக்க மழையிலும், பனியிலும், வெயிலிலும் நின்றும் பாண் கிடைக்காமல் பசியோடும் பட்டினியோடும் மக்கள் வாடியமுகத்துடன் பசிக்களையுடன் திருப்பிச்செல்கிறார்கள். சென்ற கிழமை யாழ் நகரில் ஓரிடத்தில் காணப்பட்ட பாண் கியூவில் சுமார் 2000 பேர் வரை காணப்பட்டனர்.

யாழ் மாவட்டத்தில் வாழு எட்டு இலட்சம் மக்களுக்கும் போதுமான அரிசி, கிளிநொச்சி, பரந்தன் போன்ற பகுதிகளில் வளைந்தும்—அவற்றை யாழ் குடாநாட்டுக்கு எடுத்துச்செல்லக் கூடாது என்று ஆனையிறவில் அரசு தடை போட்டிருக்கிறது. ஆனையிறவில் மட்டுமன்றி, பூனகரி, பண்ணை ஆகிய இடங்களிலும் தடைகள் போடப்பட்டுள்ளன.

ஒரு மாவட்டத்திலிருந்து மற்றோர் மாவட்டத்துக்கு அரிசி கொண்டுசெல்லப்படாது என்பதே அனைத்திலங்கைரீதியான அரசின் சட்டம்; ஆனால், யாழ்மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் இந்தச் சட்டம் பாரபட்சமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது—அதாவது, கிளிநொச்சி தொகுதி வரை நீண்டுள்ள யாழ் மாவட்டத்தில், கிளிநொச்சியிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு 14 கொத்து அரிசிக்குமேல் எடுத்துச் செல்லக்கூடாதென்று தடைவிதிக்கப்பட்டுள்ளது.

ஒரே மாவட்டத்தினுள்ளேயே ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்துக்கு அரிசி கொண்டுபோவதற்குமூன்று தடைகள் விதிக்கப்பட்டுள்ளது.

**இவ்வாறான தடை தமிழ் பகுதியான யாழ் மாவட்டத்துக்கு மட்டுமே விதிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.**

இதன் காரணமாகவே யாழ்குடாநாட்டில் அரிசி விலை உயர்ந்து மக்கள் கஷ்டப்படுகின்றனர்; உணவு நெருக்கடியைப் பயன்படுத்தி — இப்படியான ஏறுக்குமாருக தடைகளைப் போட்டு, அரசு வேண்டுமென்றே தமிழ் மக்களைப் பழிவாங்கிவருகிறதோ என்ற ஐயமும் யாழ் மக்களிடையே இப்போது தோன்றியுள்ளது.

அரிசி கொண்டுசெல்வதற்கு விதிக்கப்பட்டுள்ள தடைகள் அகற்றப்பட்டால் மட்டுமே அரிசி விலை உயர்வைத் தடுக்கமுடியும் என்று தேசிய அரசுப் பேரவையில் வரவுசெலவுத் திட்ட விவாதத்தின்போது பேசிய தமிழர் கூட்டணி பா.உ.க்கள் அனைவரும் வலியுறுத்தியுள்ளனர்.

### பண்டிதர் தந்தி

இதற்கிடையில் பண்டிதர் கா. பொ. இரத்தினம், பிரதமருக்கு அனுப்பியுள்ள அவசரத் தந்தியில்— யாழ்ப்பாணத்தில் அரிசி விலை ரூபா பதினொன்றுக்கும் மேற்பட்டுவிட்டதாகவும், ஆனையிறவு பண்ணை, பூநகரி தடைகளை அகற்றி, நாடெங்கும் ஒரே நிலையில் அரிசி கிடைக்கச் செய்யவேண்டும் என்றும் கோரியிருக்கிறார்.

---

# உ ண வு ற் ப த் தி யா ம்

உணவுற்பத்தியில் மக்கள் அனைவரையும் இன, மத அரசியல் பேதமின்றி ஈடுபடும்படி ஒரு பக்கம் பிரசாரம்; மறுபக்கம் உணவுற்பத்தியிலீடுபடும் தமிழர்களின் காணியைப் பறிக்கின்ற இனவெறி நடவடிக்கைகள்! அரசின் உணவுற்பத்தி இலட்சணம் இதுதான்!

புனேரியிலும், கல்குடாவிலும், செட்டிகுளத்திலும் பல வருடங்களாக குடியேறி விவசாயம் செய்துவந்த தமிழர்களுக்கு, அவர்களது விவசாயக்காணிகளைவிட்டு வெளியேறும்படி உத்தரவிடப்பட்டது ஏற்கெனவே தெரிந்ததே.

யாழ்குடா நாட்டில் விவசாயத்துக்கு 13,000 தமிழ் வாலிபர்கள்நிலம் கேட்டு வருகிறார்கள்— இன்னும் கொடுபடவில்லை!

தோட்டத் தொழிலாளர்கள் பலர், வடக்கில் கிழக்கில், சென்று குடியேறி உணவுற்பத்தியிலீடுபட விரும்புகிறார்கள்—அவர்களுக்குநிலம் வழங்க மறுக்கப்படுகிறது.

இதோ மற்றோர் நெஞ்சுருக்கும் செய்தி—

அப்புத்தளை தொகுதியிலுள்ள நீக்கப்பொத்தபொல்கந்தன் வாசியான கிருஷ்ணசாமி செல்வராசா எனும் தமிழர் (இலங்கைப் பிரஜை) தன் வீட்டுக்கு அருகிலுள்ள அரசாங்கக் காணிகளில் விவசாயம் செய்து, உணவுற்பத்தியில் ஈடுபட்டு வந்திருக்கிறார்.

அவரை, அவர் விவசாயம் செய்துவந்த காணியைவிட்டு உடனடியாக எழும்பும்படி பகுதி காரியாதிகாரியிடமிருந்து உத்தரவு இடப்பட்டிருக்கிறது — அவர் அப்படி எழும்பாவிட்டால் பயிர்களை நாசப் படுத்தியாவது அவரைக் காணியிலிருந்து எழுப்புவோம் என்றும் மிரட்டப்பட்டுள்ளதாம்!

—பார்த்தீர்களா? பயிர்களை நாசப்படுத்தும் இதுபோன்ற உணவுற்பத்தி திட்டத்தை வேறு எந்த நாட்டிலேனும் நீங்கள் கண்டதுண்டா இலங்கையைத் தவிர?

## உணவுற்பத்தி!

---

# யாழ்ப்பாணத்திலே....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

'மாநாடு, திட்டமிட்டபடி குறிப்பிட்ட திகதிகளில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றே தீரும். அரசியல் காரணங்களுக்காகவோ காலரா நோய் பூச்சாண்டிக்காகவோ, வேறு எந்தக் காரணத்துக்காகவுமோ மாநாடு வேறு இடத்துக்கு மாற்றப்படவும் மாட்டாது; ஒத்திவைக்கப்படவும் மாட்டாது.

'அரசியல்சார்பற்ற முற்றுமுழுதாக மொழிசம்பந்தப்பட்ட இந்த மாநாட்டின் வெற்றிக்கு அரசின் ஒத்துழைப்பையும் உதவியையும் நாடி நிற்கிறோம். அரசின் ஒத்துழைப்பு கிடைத்தாலும் சரி கிடைக்காவிடினும் சரி மாநாடு நடைபெற்றே தீரும்.

'மாநாட்டில் கலந்துகொள்வதற்காக ஜப்பான், ஹங்கேரி, கனடா, சுவிட்சர்லாந்து, இந்தியா, மேற்கு ஜெர்மனி, இத்தாலி, அவுஸ்திரேலியா, இங்கிலாந்து, அமெரிக்கா, சுவீடன் போன்ற உலக நாடுகள் பலவற்றிலிருந்தும் நூற்றுக்கு மேற்பட்ட மொழியியல் அறிஞர்கள் வருகை தருகிறார்கள். ஆய்வுக் கட்டுரைகளை அனுப்பியுள்ளனர்.

'மாநாட்டில் சமர்ப்பிக்கப்படவிருக்கும் ஆய்வுக்கட்டுரைகளை 'கல்விக்குழு' இப்போது துறைதுறையாக வகுத்துவரும் வேலையில் ஈடுபட்டுளது.

மாநாட்டுமலர் இப்போது அச்சில் உள்ளது. இலங்கைத் தமிழர்களின் தனித்துவத்தைப் பிரதிபலிக்கும் கட்டுரைகள் மலரில் இடம்பெறுகின்றன.

'மாநாட்டுக்கு வருவோருக்கு உண்டியும் உறையுளும் கொடுத்து உதவுவதற்கு வசதிமிக்க தமிழ் குடும்பங்கள் பல தயாராக இருப்பதாக உற்சாகத்துடன் அறிவித்துள்ளன.

'மாநாட்டுக்கு வருவோர் தங்குவதற்கெனவும், ஏனைய மாநாடு சம்பந்தப்பட்ட தேவைகளுக்காகவும், யாழ்ப்பாணத்தில் பல கல்லூரிகளைத் தந்துதவ அதிபர்கள் முன்வந்துள்ளனர்.

'உண்டி, உறையுள் ஆகியவற்றுக்கு பொறுப்பாக திரு. சச்சிதானந்தனும், போக்குவரத்து பொறுப்பாளராக திரு. பேரின்பநாயகமும் சுறுசுறுப்புடன் செயலாற்றிவருகின்றனர்.

'[illegible] வணிகர்களும் தனவந்தர்களும் பேரார்வமுடன் வாரி வழங்கிவருகிறார்கள். பேராசிரியர் சு. வி. தலைமையில் நிதி சேகரிப்பு உற்சாகத்துடன் நடக்கிறது.

''வரவேற்புக் குழுத் தலைவர் திருமதி புனிதம் திருச்செல்வம் மாநாட்டுக்கு வருவோரை வரவேற்கும் ஒழுங்குகளை மும்முரமாக கவனித்து வருகிறார்.

''அரசாங்க திணைக்கள தமிழ் இலக்கிய மன்றங்களும் தமிழ் பேசும் மொழிவழித்தொழிற் சங்கங்களும் உற்சாகமுடன் மாநாட்டுக்கு நிதியும், ஆதரவும் அளித்து வருகின்றன.

விவேகானந்த சபையின் ஏடான 'விவேகானந்தன்' மாநாட்டை வரவேற்று ஆசிரியத்தலையங்கம் தீட்டி, ஆதரவு நல்கியுள்ளது.

தமிழ் மொழியின் வரலாற்றில் இந்த மாநாடு ஒரு புதிய திருப்பு முனையாக அமையப்போகிறது. மாநாட்டை யொட்டி, தினகரன், தினபதி போன்ற ஏடுகளில் வரும் குழப்பம் நிறைந்த செய்திகளை நம்பாது, இலங்கைக் கிளையின் அதிகார பூர்வமான அறிக்கைகளையும் தகவல்களையுமே பொதுமக்கள் எடுத்துக் கொள்ள வேண்டும்''

— இவ்வாறு அவர் தெரிவித்தார்.

---

# அநீதியை...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

களுக்கு உடனடியாகக் கொண்டு வாருங்கள். ஒரு சிலரின் விருப்புவெறுப்புகளுக்காக இந்த இளைஞர்களைத்தொடர்ந்து சிறையில் போட்டு வாட்டாதீர்கள்.

—இவ்வாறுதேசிய அரசுப் பேரவையில் பேசிய திரு. வி. ஆனந்தசங்கரி பா. உ. கூறினார்

---

# மன்னார் தொகுதி வேட்பாளர் யார்?

'மன்னார்த் தொகுதியின் புதிய வேட்பாளர் பற்றி தமிழரசுக்கட்சியோ, தமிழர் கூட்டணியோ இது வரை எதுவித முடிவும் செய்யவில்லை மன்னார்த் தொகுதி மக்களையும், மன்னார்த் தொகுதியிலுள்ள கட்சி ஆதரவாளர்களையும் கலந்து கொண்டே ஒரு முடிவு எடுக்கப்படும் அதுவரை நாளேடுகளில் வரும் செய்திகளைக்கொண்டு யாரும் குழப்பமடையவேண்டாம் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.'

— இவ்வாறு தமிழரசுக் கட்சித் தலைவர் திரு. அமிர்தலிங்கம் சுதந்திரனுக்கு விடுத்த அறிக்கையில் தெரிவிக்கிறார்.

---

# அரசுக்கு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பா. உ. திரு. வி. என். நவரத்தினம் ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.

மேற் கண்டமுடிவு — 2—9—73 ஞாயிற்றுக் கிழமை யாழ்ப்பாணத்திலுள்ள தமிழர் கூட்டணி தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற நடவடிக்கைக்குழுக் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்டது. தமிழர் தந்தை செல்வா அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்நடவடிக்கைக் குழுக் கூட்டத்தில், இ. தொ. கா. தலைவர் எஸ். தொண்டமான், இ. தொ. கா. பொதுச் செயலாளர் எம். எஸ். செல்லச்சாமி, இ. தொ. கா. பிரமுகர் திரு சேவுகப்பெருமாள் ஆகியோரும் கலந்துகொண்டது குறிப்பிடத்தக்கது.

இந்த ஐவர் போராட்டக் குழு மனித உரிமைத் தினமான டிசம்பர் 10ந் திகதி கொழும்பில் முதல் தடவையாக கூடி திட்டங்களை உருவாக்கவிருக்கிறது.

---

இதோ மற்றுமோர் சீர்திருத்தப்பெற்ற உன்னத தயாரிப்பு

நியூ மில்க்வைற் சோப்.

உங்கள் ஆடைகளை ஆச்சரியப்படத்தக்க முறையில் சுத்தம் செய்கிறது.

மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்,
த. பெ. என். 77, — யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சனநாயகத்துக்குக் குழிபறித்திடும் சூழ்ச்சியா?

# சர்வாதிகாரத்துக்கு வழிவகுத்திடும் திட்டமா?

## உணவு நெருக்கடியில் உண்மை நிலையென்ன?

நம் நாட்டில் உண்மையாகவே உணவுப் பஞ்சமா அல்லது அரசியல் இலாபத்துக்காக நாட்டைப் பட்டினி நிலைக்குத்தள்ளிப்பஞ்சத்தை அரசாங்கமே சிருட்டித்ததா என்ற சந்தேக விரக்தியே சனநாயகத்தை விரும்பும் சகலர் மனத்திலும் இன்று இடம்பெற்றுள்ளது. இந்த எண்ணத்துக்குக் காரணங்கள் இல்லாமலும் இல்லை. இது சனநாயகத்தை அழிக்க உதவும் அடிப்படைத் திட்டமாயிருக்கலாம் என்ற எண்ணமே ஒத்துழையாமைக்குத் தூபம் போடுகிறதென்றால் மிகையாகாது.

### சனநாயகத்தை அழிக்கும் திட்டம்

தேசியப்பேரவையில் கருமவீரரான சமசமாஜிகளின் பலமும் திட்டமுமே ஓங்கி — ஸ்ரீமாவோ அம்மையார், அவர்களின் கைப்பொம்மையாக அன்னாரின் உட்கருத்தை அறிந்தும் அறியாதவராய் நின்று ஒரு சர்வாதிகாரப்பிடிக்கு நாட்டைக் கடத்திச்செல்லுகிறார் என்பதில் என்ன தவறுண்டு? எனவே சர்வாதிகாரப் பேராசை பிடித்தவர்களுக்கு மனித சுதந்திரம் — சுபீட்ச வாழ்வு—சனநாயக சித்தாந்தம் பசி பட்டினி எல்லாம் பகடைக்காய்களாக தோன்றும்.

இலங்கையுடன் தொடர்பு கொண்ட சனநாயக நாடுகளை எப்போது பழிவாங்கலாம் என்று சமயம் பார்த்திருந்த சமசமாஜத் தலைவர்கள் அதிகார பீடத்தைத் கைப்பற்றியிருக்கும் அருந்தருணத்தைக் கை நழுவவிடுவார்களா அல்லது மக்களுக்குண்டாகும் அடிமைத்தளை, பசிபட்டினி, கவலையைத் துடைப்பார்களா? எனவேதான் யூகோசிலாவேக்கிய சனாதிபதி டிட்டோவின் சீஷர்களான இவர்களின் இந்தப் பட்டினிக்கோலம் நாட்டில்சிருட்டிக்கப்படுவது அவசியமாகிறது.

பசிவந்திடப் பத்தும் பறந்து போவதுபோல சர்வாதிகார வலைவிரிப்பை மக்கள் கவனிக்கவும் தடுக்கவும் அவகாசமும்சக்தியும் அற்றவர்களாக்கப் பட்டிருக்கிறார்கள். அரசுக்கு உண்மையில் பட்டினியைப்போக்கஎண்ணமிருந்தால் இலங்கைக்கு உணவும் உடையும் பொருளும் இருகரமும் நீட்டி உதவக் கூடிய பரஸ்பரபாசம் உள்ளஇலங்கையைவளர்த்து வந்த வளர்ப்புத் தந்தையர்களான சனநாயக நாட்டுத் தலைவர்களைப் பகைத்து, பலாத்காரத்தையும் சர்வாதிகாரத்தையும் இரு கண்களென மதிப்பதோடு உதவச் சக்தியும் அற்ற சோசலிசம் பேசும் பிறநாடுகளை மாத்திரம் அரவணைப்பார்களா? நாட்டின் சீரழிவுக்கு அடிப்படைக்காரணம் இந்நிலையே என்பதை நியாய புத்திபடைத்தவர்கள்மறுக்க மாட்டார்கள்.

### அந்நிய நாட்டுக் கொள்கை

சனநாயக நாடுகளைப் பகைத்துக் கொள்ளவும் அந்நாடுகளின்மேல் அபாண்டங்களைச் சுமத்தவும் நம் நாட்டு அரசு கண்ணுறங்காது கருமமாற்றுவது பட்டினிக்கு அடிகோலுமா அன்றேல் பட்டினியை அகற்றுமா? முதிர்ந்த அரசியல் ஞான முடைய பிரித்தானிய அரசு இஸ்ரேல் பிரச்சினையில் நடு நிலைமை வகிப்பதுபோல்இலங்கையும் ஏன் நடுநிலைமைக் கொள்கையைக் கடைப் பிடித்து சர்வதேச ஆதரவைப்பெறக்கூடாது.

கூட்டுச்சேரா நாடு என்ற போர்வையில் உள்நாட்டில்

### 'சாந்திநிதி'

அற்ப அரசியல் லாபத்துக்காகவும் வெளிநாடுகளில் சர்வாதிகாரம் பேசும் நாடுகளின் திருப்திக்காகவும் பாரபட்சமான தீர்க்கதரிசனமற்ற கொள்கையால் இரண்டும்கெட்ட நிலையைத் தேடிக்கொண்டு நல்ல மனம் படைத்த நாடுகளின் சந்தேகத்துக்கும் பகைமைக்கும் இலக்காகிவரும் இலங்கையரசு பட்டினியைப் போக்கத்தக்க முறையான உதவிகளை முட்டாள் தனமாகத் தள்ளிவிட்டு நாட்டில் பஞ்சம் - உணவுபற்றுக்குறை என்று அபாயச்சங்கு ஊதி வருவதைச் சனநாயக வாதிகள் அச்சத்தோடும் கவலையோடும் காண்கிறார்கள்.

நாட்டின் உணவுப் பஞ்சம் உண்மையில் கட்டு மீறிய தோன்றுமின், அனுபவமும் ஆற்றலும் தேசாபிமானமும் உள்ள எதிர்க்கட்சித் தலைவர்களையோ, தமிழ்த்தலைவர்களையோ உதவிக்கு அழைக்கிறதாகத் தெரியவில்லை. வாயளவில் அரசியலையும் கடந்து நின்று யாவரும் நாட்டைக் காப்பாற்ற வாருங்கள் என்று வேதாந்தம் பேசுவதல்லாது, உதவக் கடமைப்பட்ட பிரதிநிதித்துவமும் பொறுப்பு முள்ள வர்களைக் கூட்டி ஆலோசனை நடத்துவதற்குப் பதிலாக அவர்களை வெறுப்பதும் பகைப்பதும் ஏமாற்றுவதுமான நடைமுறையில் இறங்கிக்கொண்டு பேராபத்திலிருந்து காப்பாற்றவாருங்கள் என்று முதலைக் கண்ணீர் வடிப்பதில் ஏதாவது கருத்துண்டா? எனவே அரசு இன்று எடுத்துக்கூறும் உணவுப்பஞ்சமென்ற நிலை பாசாங்குதான் என்று சொல்ல நியாயமுண்டு.

மேலும் தமிழரை ஒத்துழைக்கக் கூறும் அதே வேளையில் அவர்களை அடிமைப்பிரசைகளாக நடத்திக்கொண்டும், அதற்குள்ளும் தமிழினத்தின் எட்டப்பர்கள் என வருணிக்கப்படும் தமிழினத்தின் பெரும்பான்மையினரின் வெறுப்புக்கு ஆளானவர்களின் தலைமையில் உணவுற்பத்தி நிர்வாகத்தைஒப்படைத்தும்காலம் போக்குவது உணவுப் பஞ்சத்தைப் போக்கும் உண்மை வழியாகுமா என்ற வினாவை எழுப்புகிறது.

### உணவுப்பஞ்சம் உண்மையாக இருந்தால்......

பஞ்சத்தைப் போக்கும் உண்மை வழிகளைக் கடைப்பிடிப்பதிலிருந்தே பஞ்சம் உண்மையாகவே எதிர்பாராது வந்த ஆபத்து என்று நம்பமுடியும்!

பட்டினியைப் போக்கும் சரியான வழிதுறைகளைத் தள்ளிவிட்டு மக்களை உண்மையாகவே சக்தியற்றவர்களாகச் செய்யும் உணவுப் பற்றுக்குறையைச் இரட்டிப்பதன் மர்மந்தான் என்ன?

உணவுப்பற்றுக்குறையால் மக்கள் நாட்டில் உணவு உற்பத்தியில் விழிப்புற்றிருக்கிறார்கள் என்பது ஓரளவு இலாபமாகத் தென்பட்டாலும் சனநாயக உரிமையை இழந்து உணவுக்காகச் சீவிப்பதில் மக்கள் ஏமாற்றமடையக்கூடாது என்பதே தீர்க்கமான முடிபாகும்.

### மனம் மாறினால் பசி பறந்துவிடும்

அரசு சனநாயகத்தை மறைமுகமாக அழிக்கும்வழி துறைகளைக் கைவிட்டு ஊழல்கள் நிறைந்த கூட்டுறவுப் பங்கீடுகளைச் சீர்ப்படுத்தி, உலகின் நடுநிலைமைக்கொள்கையைக் கடைப்பிடித்து நாட்டின் முறையான உரிமையாளரான தமிழினத்தின் ஒத்துழைப்புக்குரிய வழிகளைத் தாமதமின்றி ஏற்படுத்தி எதிர்க்கட்சியினரையும் மதித்து நடந்தால் உணவுப்பஞ்சம் பார்த்திடப் பறந்து போகுமன்றோ!

## கொழும்பு மாநகரசபை மேயருக்கு யாழ் முன்னாள் மேயர் வேண்டுகோள்

யாழ் மாநகரசபையின் வரியிறுப்பாளர்களில் 95 வீதத்துக்கு அதிகமானோர் தமிழ் பேசுபவர்கள். அப்படியிருந்தும், சிங்களம் பேசும் மிகவும் அற்பதொகையினரான வரியிறுப்பாளர்களின் நலன்கருதி, ஒரு சிங்கள தட்டச்சாளரையும், மேலும் சிங்கள தேர்ச்சி உத்தியோகத்தர்களையும் நியமிப்பது அத்தியாவசியம் என்று அச்சபை தீர்மானித்துள்ளது.

இதைப் பார்க்கும்போது —40 விதம் தமிழரையும், தமிழ்பேசும் முஸ்லிம்களையும் வரியிறுப்பாளராகக் கொண்டகொழும்பு மாநகரசபை, தன்னிடமிருந்து வந்த ஒரேயொரு தமிழ் மொழி பெயர்ப்பாளர் பதவியைக்கூட இல்லாமற் செய்வதன்மூலம், மேற்படி மாநகரசபையின் கணிசமான தொகையினரான வரியிறுப்பாளர்கள் தங்களுடைய மொழியில் தொடர்பு கொண்டு பதில்பெறும் வசதியை பறிப்பதையிட்டும் ஒருவர் எடைபோட்டுப் பார்க்கவே செய்வார்.

எனவேகொழும்பு மாநகரசபை மேயருக்கும், உள்ளூராட்சி அமைச்சருக்கும் கூற விரும்புவதென்னவென்றால்—யாழ் மாநகரசபையின் முன்மாதிரியைப் பின்பற்றி—கொழும்பு மாநகரசபையிலும், தமிழ் தெரிந்த றிப்போர்ட்டர்களையும், முதலாம் கிரேட் — மொழிபெயர்ப்பாளர்களையும், தட்டெழுத்தாளர்களையும் நியமிப்பதன் மூலம், மேற்படி மாநகரசபைக்குட்பட்டுள்ள தமிழ்பேசும் சிறுபான்மை மக்களின் சகல வசதிகளையும் மீட்டுக்கொடுங்கள் என்பதே.

இதன்மூலம் கொழும்பு மாநகரசபையுடன், மாநகரசபைக்குட்பட்ட தமிழ் பேசும் மக்கள் தமிழில் தமது அலுவல்களை செய்யவாய்ப்பு ஏற்படுவதுடன், இன்று புறக்கணிக்கப்பட்டுள்ளதாக கருதப்படுபவர்களும் கொழும்பு மாநகரசபையின் பிரிக்கமுடியாதவர்களுமான அவ்வரியிறுப்பாளர்களிடையே எந்த விதமான பாரபட்சங்களையும் நீக்கி விடும்.

எனது இந்த வேண்டுகோள்—கட்சி கண்ணோட்டமற்ற கொழும்பு மாநகர சபை மேயரின் கண்களில் விழுந்து— இந்த நீண்டகால மனக்குமுறல் துடைக்கப் படும் என்று எதிர்பார்க்கிறேன்.

—டாக்டர்
எஸ். ஏ. தர்மலிங்கம்.
(முன்னாள் மேயர், யாழ். மாநகரசபை)

பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.
15-11-73.

---

### துரையப்பா வாயைமூடப்படுமா?

'தமிழ் கடிதங்களுக்கு சிங்களத்தில் பதில் வந்தால் என்னிடம் முறையிடுங்கள்' என யாழ்நகர் மேயர் அல்பிரட் துரையப்பா அவர்கள் 7-8-73ந் திகதிய 'ஈழநாடு' பத்திரிகையில் செய்தியொன்றை வெளியிட்டிருந்தார். அவருடைய அந்தத் தமிழ்பற்று மிகுந்த வேண்டுகோளை 'ஈழநாடு' பத்திரிகையில் படித்தவுடன், எனக்குக் தனிச்சிங்களத்தில் வந்திருந்த சில கடிதங்களை அவருக்கு அனுப்பி நடவடிக்கை எடுக்கும்படி கேட்டிருந்தேன்.

8-8-1973ந் திகதியன்று நான் அனுப்பிய கடிதத்திற்கு 'நடவடிக்கைஎடுக்கப் படுகிறது' என — 'திரு. துரையப்பா விடமிருந்து 16-8-73ந் திகதியன்று பதிலொன்று வந்தது. ஏறக்குறைய மூன்று மாதங்களாகியும் எனது சிங்களக் கடிதங்களுக்கு அவரால் தமிழ்மொழிபெயர்ப்புப் பெற்றுத்தரமுடியவில்லை. தமிழ் மொழிக்கு இந்த அரசாங்கம் எத்தகைய உரிமைகளை வழங்கியிருக்கிறது என்பதை இப்பொழுதாவது திரு. துரையப்பா அவர்கள் உணர்ந்திருப்பார் என நினைக்கின்றேன். பத்திரிகையில் அறிக்கைவிட்டு யாழ்ப்பாண மக்களை ஏமாற்றுது இருப்பாராயின் அதுவே அவர் தமிழுக்குச் செய்யும் பெருந்தொண்டாகும்.

ஐ. தி. சம்பந்தன்.
304, காலி வீதி
கொழும்பு-6

### மலையகத்...

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

உள்ள உரிமைவேட்கையைக் கண்டு பெருமைப்பட்டேன்' நாம் தொடர்ச்சியாக நடாத்த இருக்கும் உரிமைப் போராட்டங்களுக்கு அவர்களும் எங்களுடன் தூண்களாக நின்று செயலாற்றுவார்கள் என்பதையும் நாம் அனுபவ வாயிலாகக் காண்கிறோம்.

அப்பேற்பட்ட மலையகத்து மக்களுக்கு வாழ்வளிக்க வேண்டியவர்கள் நாம்தான். இந்தப் புனிதமான வேளையிலே அரசாங்கத்திற்கு எமது தமிழ் இளைஞர் பேரவை சார்பில் நான் ஒரு சவால்விட விரும்புகிறேன். அதாவது தமது வயிற்றுப் பசியைத் தீர்ப்பதற்காக மலையகத் தொழிலாளிகள் நடாத்திவரும் மாதச் சம்பளப் போராட்டத்திற்கு அரசாங்கம் செவிசாய்க்கவேண்டும்; அப்படி செவிசாய்க்காமல் தொடர்ந்தும் மலையக மக்களை பசிக்கும் பட்டினிக்கும் இந்த அரசாங்கம் ஆளாக்குமானால் நாம் நிச்சயமாக மலையக மக்களின் மாதச் சம்பளப் போராட்டத்தில் பங்குபற்றி வடக்குக் கிழக்கு மாகாணங்கள் உட்பட தமிழ் மக்கள் வாழ்கின்ற பிரதேசம் எல்லாம் இந்த மாதச் சம்பளப் போராட்டம் நடாத்துவோம். இந்தப் போராட்டத்தில் நியாயம் வழங்கும்வரை ஓயமாட்டோம் என்பதை கூறுகிறோம்.

—இவ்வாறு யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தமிழ் இளைஞர் பேரவையின் 5-வது நாள் உண்ணாவிரதத்தின் இறுதியில் நடைபெற்ற கருத்தரங்கில் பேசிய திரு. சி. புஷ்பராசா முழக்கமிட்டார்.

### கம்யூனிஸ்டுகளின் சப்பாணிப் போராட்டம்!

திருநெல்வேலி ப.நோ.கூ. சங்கத்தின் மூலம் பங்கீட்டு முறையில் மக்களுக்குப்பாண் விநியோகிக்கப் படுமென்று பத்திரிகைவாயிலாக அறிந்த மக்கள், அடுத்த நாளான 12.11.73, அன்று,பனியையும் மழையையும் பொருட்படுத்தாமல், கியூவில் நின்றும் ஏமாற்றமே,கண்டனர். மறுநாளும் அதே ஏமாற்றத்தைக் கண்டு கொதிப்படைந்த மக்கள் 14.11.73 அன்று அச்சங்க ஊழியர் அனைவரையும் உட்செல்லவிடாது தடுத்துச் சத்தியாக்கிரகம் செய்தனர். அதன் பலனாக அச்சங்கத்தலைவர், ஓர் உடன் பாட்டுக்கு வந்தார். அதன் பின்னரே; சத்தியாக்கிரகத்தில் இருந்த மக்கள் கலைந்து சென்றனர்.

இந்தச் சத்தியாக்கிரகத்தில் இன்று பிரபல கம்யூனிஸ்ட என்று தம்மைத் தாமே கூறிக்கொள்ளும் சீனக்கம்யூனிஸ்டுகள் சிலரும் அரசாங்கத்திலிருந்து உடைந்து விழுந்த கம்யூனிஸ்டுகள் சிலரும் பங்கு பற்றியதுகுறிப்பிடத்தக்கது சத்தியாக்கிரகத்தை சப்பாணிப் போராட்டம்என்றுவர்ணித்தும் அதன் மூலம் ஒன்றும் சாதித்துவிடவும் முடியாது, வெற்றி பெறவும் முடியாது என்றும் தமிழரசாரை ஏளனம் செய்த இவர்கள்,அன்று இப்படி ஒருபோராட்டத்தின் மூலம் வெற்றி பெறலாமென்பதைத் தெரிந்து கொண்டார்கள். காலங் கடந்தாவது இவ்வுண்மையைத் தங்கள் மூலம் கண்டு கொண்டார்களென்று, திருநெல்வேலி — நல்லூர்த் தொகுதி வாலிபர்கள் பெருமைப் பட்டுக்கொண்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'மன்னார் முத்துக்களில் அதிசிறந்த நல்முத்து அமரர் அழகக்கோன்!'

## தேசிய அரசுப் பேரவையில் அஞ்சலி!

"திரு. அழகக்கோனின் மறைவின் மூலம் மன்னார் மக்கள் ஒரு பெரிய தலைவரை இழந்துவிட்டார்கள். கத்தோலிக்க திருச்சபை ஒரு உண்மையான கத்தோலிக்கரை இழந்துவிட்டது; நமது தமிழரசுக்கட்சி உண்மையான விசுவாசமிக்க ஒரு ஊழியரை இழந்துவிட்டது.

"கடந்த 18 ஆண்டுகளாக தமிழரசுக்கட்சியில் பணியாற்றி வந்த அமரர் அழகக்கோன், கட்சிக்கட்டுப்பாடுகளுக்கமைய இந்தப் பேரவையின் உள்ளேயும் வெளியேயும் நடந்துவந்துள்ளார். திரு. அழகக்கோனின் பிரிவைத்தாங்க முடியாது — எனது தலைவர் திரு. சா. ஜே. வே. செல்வநாயகம், தாம் மிகவும் நம்பிக்கை வைத்திருந்த தளபதியையும் நண்பனையும் இழந்துவிட்டேனென்று வேதனைப்படுகிறார். அவரது பிரிவு, தமிழ் சமுதாயத்துக்கு ஈடுசொல்ல முடியாத பேரிழப்பாகும்."

—இவ்வாறு தேசிய அரசுப் பேரவையில் அமரர் வி. ஏ. அழகக்கோன் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்துக் கொண்டுவரப்பட்ட தீர்மானம் மீது பேசிய சாவகச்சேரி பா. உ. வி.என். நவரத்தினம் குறிப்பிட்டார்.

மட்டக்களப்பு முதல்வர், செ. இராசதுரை பேசுகையில் கூறியதாவது:—

"திரு. அழகக்கோனின் இறுதிச்சடங்கு மன்னாரில் நடைபெற்ற போது அங்கு ஆயிரக்கணக்கானோர் கூடி கண்ணீரும் கம்பலையுமாக தங்கள் தலைவருக்கு அஞ்சலி செலுத்தினார்கள்.

"எகிப்து நாட்டு இளவரசி கிளியோபாத்திராவுக்கு ஈழத்தமிழ் நாட்டின் துறைமுகமாகப் பண்டு விளங்கிய மன்னார்த் துறைமுகத்திலிருந்து மன்னார்க்கடலில் எடுக்கப்பட்ட முத்துக்கள் ஏற்றுமதி செய்யப்பட்டதாக வரலாறு பேசுகிறது. அப்படிப்பட்ட முத்துக்களையெல்லாம் விட அதி சிறந்த முத்தாக திகழ்ந்தவர் அழகக்கோன்.

திரு. அழகக்கோனின் நேர்மை அப்பழுக்கற்றது. அவரது தொகுதியிலுள்ளவர்கள் பலர் தாங்கள் சேமித்த பெருந்தொகைப் பணத்தை திரு. அழகக்கோனிடம் பாதுகாப்புக்காக கொடுத்து, மீண்டும் அதைப் பத்திரமாக திரும்பப் பெற்றிருக்கிறார்கள். யாருக்கும் அநீதி செய்யாதவர் அழகக்கோன். அவர் பிரிவு தமிழினத்துக்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.

கிளிநொச்சி பா. உ. திரு. வி. ஆனந்தசங்கரி பேசுகையில்— தமிழ் காங்கிரஸ் கட்சி திரு. அழகக்கோனிடம் பெருமதிப்புவைத்திருந்தது இன, மத பேதமின்றி மன்னார் தொகுதி மக்களுக்கு சேவை செய்தவர் திரு. அழகக்கோன்" என்று கூறினார்.

காவலூர் பா.உ.கா.பொ இரத்தினம் பேசுகையில் — உதட்டில் ஒன்றும், உள்ளத்தில் ஒன்றுமாக இருப்போர் நிறைந்த அரசியல் உலகில்— உதட்டில் உள்ளதைத்தான் உள்ளத்திலும் கொண்ட, கள்ளம் கபடமற்றவராக அழகக்கோன் வாழ்ந்தார் என்று குறிப்பிட்டார்.

## இரங்கல் செய்தி

அமரர் அழகக்கோன் மரணமான செய்திகேட்டதும், மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட தமிழ்இளைஞர் பேரவையினர், ஊரெங்கும் கறுப்புக்கொடிகளை ஏற்றியதுடன், அனுதாபம்தெரிவித்து துண்டுப்பிரசுரமொன்றையும் உடனடியாக வெளியிட்டார்கள்.

வந்தாறு மூலை கதிரவன் சனசமூக நிலையத்திலும் அழகக்கோன் பிரிவு குறித்து துக்கம் தெரிவிக்கு முகமாக 28—11—73ல் கறுப்புக் கொடி ஏற்றப்பட்டது. அத்துடன் அன்று வாசிகசாலையும் மூடப்பட்டது.

யாழ் வண்ணார்பண்ணை இளைஞர் முன்னேற்றக்கழகமும் அழகக்கோன் மறைவு குறித்து அனுதாபச் செய்தியை அனுப்பி வைத்ததுடன், 'அண்ணா அறிவகமும்,' பூட்டப்பட்டிருந்தது. குப்பிழான் தமிழர் கூட்டணி இளைஞர்களும் அமரர் அழகக்கோன் குடும்பத்துக்கு அனுதாபச் செய்தியொன்றை அனுப்பி வைத்தனர்.

தமிழ் பேசும் அரசாங்க பொது ஊழியர் சங்க மன்னார் கிளை விடுத்த இரங்கல் செய்தி வருமாறு:—

"கடந்த 18 வருடங்களாக அரசியலில் மன்னார்த் தொகுதியின் முடிசூடா மன்னனாக விளங்கிய திரு. வி. ஏ. அழகக்கோன் அவர்கள் 25. 11. 73 அன்று அமரரான செய்தி கேட்டு எமது சங்கம் ஆற்றொணாத் துயரடைகிறது. பகைவனையும் நண்பனாக மதிக்கும் பண்புடைய அமரர் அழகக்கோன் அரசியல் குரோதமின்றி அனைவருக்கும் அருந்தொண்டாற்றினார். ஈழம வாழ் தமிழ் மக்களுக்கு அவரின் மறைவு ஓர் பேரிழப்பாகும். சிறப்பாகத் தமிழ் அரசாங்க ஊழியர்களுக்கு அன்னாரின் மறைவினால் ஈடு செய்ய முடியாத ஒரு பெரு நட்டமேற்பட்டு விட்டது. அமரர் அழகக்கோனின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.!

## இ. தொ. கழகம் அனுதாபம்!

'தமிழரசுக்கட்சி தலைவர்களில் ஒருவரும், மன்னார்த் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினருமான திரு வி. ஏ. அழகக்கோன் அவர்களின் திடீர் மரணம் குறித்து ஆழ்ந்த கவலையடைகின்றோம். திரு. வி. ஏ. அழகக்கோன் அவர்கள் தமிழரசுக் கட்சி நடத்திய ஒவ்வொரு போராட்டங்களிலும் கலந்துகொண்டு தன் சேவையை அதன் மூலம் தமிழ் மக்களுக்கு வெளிப்படுத்தியுள்ளார். குறிப்பாக மன்னார்த்தொகுதியில் குடியேறியிருக்கும் தோட்டத் தொழிலாளர்களுக்கு அன்னார் அளப்பரிய சேவையை செய்துள்ளார். இதனை யாரும் மறைக்கவோ மறுக்கவோ முடியாது. இந்நேரத்தில் அவரை இழந்து துடிக்கும் அவரது குடும்பத்தாருக்கு இலங்கைத்தொழிலாளர் கழகம் தனது ஆழ்ந்த அனுதாபத்தையும் துக்கத்தையும் தெரிவித்துக்கொள்கின்றது.

இவ்வாறு இ. தொ. கழகம் வெளியிட்ட அனுதாப அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மலையகத் தமிழர்களின் மாதச்சம்பளப் போராட்டத்துக்கு தமிழ் இளைஞர் பேரவையும் தோள் கொடுக்கும்!

"இங்கே தமிழ் இளைஞர் பேரவையின் கொடியை முதன்முதலாக ஏற்றிவைத்துள்ளோம். இக்கொடியை ஏற்றிவைத்த ஓய்வுபெற்ற மாவட்ட நீதிபதி தம்பித்துரை அவர்களின் புதல்வன் முத்துக்குமார் அவர்கள் இளைஞர் பேரவையின் முக்கிய உறுப்பினராவார். அவர் இன்று உரிமை கேட்ட காரணத்தால் வெஞ்சிறையிலே வேதனைப்படுகிறார்.

தன் புதல்வன் சிறையில் வேதனைப்படுகிறான்என்பதற்காக ஒதுங்கிக்கொண்டவரல்ல தம்பித்துரை அவர்கள். அவர் மேலும் எமக்கு உரிமைப் போராட்டத்திற்கு ஊக்கமளித்து எம்மை இலட்சியப் பாதையில் இட்டுச் செல்கிறார் அப்படிப்பட்ட தலைவர் எமது கொடியை ஏற்றிவைத்ததில் நாம் பெருமைப் படுகிறோம்.

இங்கு சிறையில் உள்ள இளைஞர்களின் பெற்றார்கள் உள்ளார்கள்; அவர்கள் முன்னிலையிலும் ஏற்றி வைத்த இந்தக்கொடி தமிழினத்தின் தேசியக்கொடியான உதயசூரியன் கொடியின்கீழ் சுதந்திரப் போராட்டத்திற்காக உழைக்கும், எமது தேசியக்கொடியான உதயசூரியன் கொடியின்கீழ் எமது கொடியை ஏற்றி வைத்த நாம் ஐந்து கோரிக்கைகளை முன்வைத்து தொடர்ச்சியாக நடாத்தி வந்த உண்ணாவிரதம் 50வது நாளைப் பூர்த்தி செய்கின்ற இந்த வேளையிலே எமது உடலின் உதிரமாகிய மலையகத்து மக்களை நாம் இங்கு நினைவுகூர வேண்டியவர்களாகவுள்ளோம்.

முக்கியமாகத் தமிழனுடைய உரிமைப் போராட்டத்தில் மலையக மக்களின் பங்கு அளவிட முடியாததாகும். அன்று தமிழன் நடாத்திய உரிமைப் போராட்டத்தில் குதித்தது மட்டுமல்லாமல், ஐயாவு பிரான்சிஸ் என்ற இளம் சிங்கங்களைத் தமிழனுக்காக அர்ப்பணித்த பெருமை மலையகத் தமிழ் மக்களைச் சார்ந்ததாகும்.

போராட என்றே பிறந்த அந்தக்கூட்டம் எத்தனையோ போராட்டங்களுக்கிடையே உயிர்வாழ்கின்றது. பட்டினிப் போராட்டம் நிலம் வேண்டிப் போராட்டம், உரிமைப் போராட்டம் இப்படியாக அன்றாடம் போராடியே வாழ்க்கையை ஓட்டுகின்றார்கள். நான் மலையகம் சென்றபொழுது அம்மக்களிடம் கலந்துரையாடும்பொழுதும் அவர்களிடையே

(8-ம் பக்கம் பார்க்க)

# நீண்டபெரும் பயணம் ஏனோ?

-அன்பன்-

செந்தமிழர் துயர்தீர்க்க ஈழ நாட்டில்
செப்புமுடல் பொருளாவி மூன்று மீந்த
தந்தையழ கக்கோனே மன்னார் தந்த
தவப்புதல்வ உன்மறைவைத் தாங்குவோமோ
வெந்தணலில் மெழுகாகித் தமிழ ரெல்லாம்
வெய்துயிர்க்கும் வேளையிலே விதிவ சத்தால்
உன்தனையும் நாமிழந்தோம்; உறுதி யற்றோம்
உன்பெயரைக் கூறவரு வார்கள் யாரோ?

வெள்ளைமனம் கொண்டவன் நீ உடலும் வெள்ளை
வீண்வார்த்தை யற்றவன் நீ விவேகி; வீரன்
கள்ளர்கட்கோ நீ பகைவன்; ஆனால் நல்லன்
கண்டிப்பாய் அடுத்த கணம் கருணை செய்வாய்
தெள்ளுதமிழ் என்றால் நீ உயிரை ஈவாய்
திருகுதாளஞ் செய்வோரைத் திணற வைப்பாய்
பிள்ளைமனம் கொண்டவனே பெருமை மிக்கோய்
பிறந்தமண்ணை, தமிழ்மொழியைக் காப்பார் யாரோ?

ஊரிரண்டு பட்டாலோ கூத்தா டிக்கு
ஊதியமாம்; என்பார்கள் தமிழருள்ளும்
பேரிரண்டு படைத்தவர்கள் புரட்டுக்காரர்—
பிறந்ததனால் நாங்கள்தலை தாழ்ந்து விட்டோம்
காரிருண்டே மழை பொழியும்; தமிழருக்கோ
கண்ணிருண்டே பொழிகிறது; கேட்பா ரில்லை
நீரிருந்தும் பயனில்லை அதனால் தானோ
நீண்டபெரும் பயணமதைத் தொடர்ந்தாய் ஐயா!

# மறவா நீ மறைந்தாயா?

(வந்தாறு மூலை— அண்ணாதாசன்)

மன்னாரின் மணி விளக்கே அழகக்கோனே!
மறத்தமிழர் பாசறையின் வயிரத் தூணே
முன்னோரின் வழி நின்று இந்த நாட்டில்
மூத்த தமிழ் அரசோச்சவேண்டும் என்று
எந்நாளோ எடுத்திட்ட திட்டம் தன்னில்
எழுந்திட்ட தமிழரசுக் கூட்டம் இங்கு
இந்நாளும் நடத்திட்ட உரிமைப்போரால்
இளைத்துப்போய் விட்டாயா? எங்கு சென்றாய்?

கல்லெறிகள் வாங்கியதோர் தமிழர் கூட்டம்
கன்னித் தமிழுக்கு உரிமை கேட்டுச்
சொல்லெறிகள் பலபட்டும் சோர்ந்து கெட்டுச்
சொக்கிப்போய் மரமாக நின்றிடாமல்
நல்லதொரு தமிழரசு அமைக்கவென்று
நடத்திட்ட படைமறவர் கூட்டம் தன்னில்
வல்லவருள் ஒரு மறவா! மன்னார் மன்னா!
மறைந்தாயா இந்நாளில்? எங்கே சென்றாய்;

# கண்ணுனக்கு இலையோடா காலா!

—செ. குணரத்தினம்

மன்னார் மறத்தமிழர்
மாண்புமிகு மாமன்னா
இந்நாளில் எமைவிட்டேன் போனாயோ—உன்னை
எண்ணத் தமிழ் நெஞ்சம்
ஏங்கிப் புலம்பு தய்யோ
கண்ணுனக்கு இலையோடா காலா!

கொள்கைப் புலியெங்கள்
குழம்பாத அறிவாளன்
வெள்ளைத்தோல்மேனி அழகக்கோன்—வெள்ளை
உள்ளத்துக்குள்ளே
ஓர்கோடித் தமிழுணர்ச்சி
வெள்ளத்தை வைத்திருந்த வீரன்!

ஈழத் தமிழ்க் குலத்தின்
இன்னலைத் தீர்க்கவென்றே
வேழம்போல் நின்றவனை வேண்டுமென்றே—காலா
கொன்றாயே பாவி
கொடியவன் நீ என்னெதிரே
நின்றுபார் உனைக்கொல்வேன் நெரித்து!

அழகக்கோன் உடலைத்தான்
அபகரித்தாய் அன்னாரின்
அழகுத் தமிழுணர்வை அழிப்பாயோ—உலகெல்லாம்
அழியாமல் வாழ்கின்ற
அவன் வீர உணர்ச்சியினை
அழிப்பதற்குத் துப்பில்லை அறி!

# மன்னாரின் தமிழ்க் குரலே!

("வன்னியூர்க் கவிராயர்")

இந்நாட்டுத் தமிழ்ப்பேசும் இனத்து மக்கள்
இழந்திட்ட உரிமையெலாம் மீட்பதற்காய்த்
தன்னலத்தைத் துச்சமென வுதறிச் சேவை
சலியாம லாற்று தலைவர்களைக்கொண்ட
நன்னயஞ்செய் தமிழரசுக் கட்சிக் சார்பில்
நயந்து மன்னார்த் தொகுதி மக்கள் தெரிவுசெய்த
மன்னாரின் தமிழ்க் குரலே! உடலால் நீயும்
மறைந்தனையோ நின்னுருவைக் காண்பதென்னாள்?

ஆயிரத்துத் தொளாயிரத்து ஐம்பத்தாறும்
ஆண்டுதொட்டு—அரசியற் சூழ்ச்சிகளால்—தேர்தற்
காயழியும் மது, பணத்தால், இச்சகத்தால்
கால்வார வொண்ணாத வெற்றியீட்டித்
தாயகத்தின் உயர்வினுக்காய் உரிமைக்காகத்
தான் 'மரணம்' மட்டிலுமே உழைத்த தீரா!
போயினையோ பூதவுடல் தன்னை நீத்துப்
புகழுடம்பில், தமிழ்த் தலைவ அழகக்கோனே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைத்தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பட்டது




## கடைசி வாரம்

கிங்ஸ்லி (கொழும்பு) லக்ஷ்மி (கரவெட்டி) வெம்பிளி (கண்டி)

ஜெமினி, ஜெயந்தி, நாகேஷ்,
முத்துராமன், M. R. R. வாசு,
சுந்தரராஜன் A. சகுந்தலா
—நடித்த—

கே பாலச்சந்தரின்

# புன்னகை

இது ஒரு வழக்கமான கதையல்ல
வாழ்க்கையில் அடி எடுத்து வைக்கும்
நால்வரின் குணதிசயங்களை
விமர்சிக்கும் ஒரு கட்டுரை...
மூதன் மூதலாக
ஒரு திரைப்படமாக வந்திருக்கிறது

## 2வது வெற்றி வாரம்

செல்லமகால் (கொட்டாஞ்சேனை)

ஜெய்சங்கர், சோ,
தேங்காய் சீனிவாசன், எம். ஆர். ஆர். வாசு,
பாரதி, என். எம். ராஜம் —நடித்த

# உனக்கும் எனக்கும்

## 14ம் திகதி முதல்

கெயிட்டி


ஜெய்சங்கர், நாகேஷ்,
வி. கே. ராமசாமி, எஸ். வி. சகஸ்ரநாமம்,
வி. எஸ். ராகவன், லட்சுமி, ரமாபிரபா,
காந்திமதி, பார்வதி —நடித்த—

# நவாப் நாற்காலி

## 2வது மாதம்

சென்ட்ரல் (மருதானை) ராணி (யாழ்நகர்) ஜோதி (திருகோணமலை)

தினசரி 2—6—9.30 ஞாயிறு காலை 10மணி | 10.30—2.30—6.00—9.30 மணி | 2.30—6.30—9.30 ஞாயிறு காலை 10மணி



இதயத்தை உருக்கும் தாயின் அன்பு! அழகும், வலிமையும்
அன்புக்கு நிகரில்லை! தாய், தந்தை, சகோதரர்கள்
மெச்சத்தகுந்த ஓர் சித்திரம்!

இக் கதையின் முடிவை யாருக்கும் சொல்லாதீர்கள்!

சிரிப்பும், அழுகையும் சரிவர நிறைந்த எல்லோரும்
பார்க்க விரும்பும் உன்னத நடிப்பு!

ஜெயா, முத்துராமன், சாவித்திரி, சகுந்தலா,
சோ, மனோரமா நடித்த

# பெத்த மனம் பித்து

(பாஸ்கள் ரத்து)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிடெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்கா மாவத்தை 194 ஏ. இலக்கத்தில் 1973ம் வருடம் டிசம்பர் மாதம் 9-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டுள்ளது.